உ

கணபதிதுணை.

புதுக்கோட்டை சமஸ்தானம்

திருப்புல்வயலி லெழுந்தருளியிருக்கும்

குமரக்கடவுள்பேரில்

# குமரமலைப் பிள்ளைத்தமிழ்.

இது

இராயபுரத்திலிருக்கும்

குன்றக்குடித் திருவண்ணாமலையாதீன மடத்து வித்வான்

புகழேந்தி வம்சவாணிதாச

வீரபத்திரக் கவிராயரவர்கள் பேரரும்,

முத்துச்சாமிக் கவிராயரவர்கள் குமாரருமாகிய

வீரபத்திரக் கவிராயரவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை. யூர்

நா. கதி. கதிரேசன் செட்டியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1909.

Dr. U. V. S. IYER LIBRARY
23568
MADRAS-90

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்

புதுக்கோட்டை சமஸ்தானம்

இராயபுரம் ப்ரஹ்மஸ்ரீ

தி. வெ. இராமஸ்வாமி சாஸ்திரிகள்

இயற்றியது.

வித்வத்ப்ரஶம்ஸநீயேந வீரபத்ரஸுதேஷிணா ।
ஸாந்த்ர த்ராவிடவாக்ஜாலா க்ருதா ரஸகுணோஜ்ஜ்வலா ॥ ௧ ॥

காந்தாரஶைலேஶதேவாய பக்தாபீஷ்டப்ரதாயிநே ।
ஸமர்ப்பிதா மாதுரஸம்பத்ஸ்வேத வாந்நிவேஶ விதுஷாம்கதா ॥ ௨ ॥

ஸுதீப்ரஶாஸ்யவணிஜா ஸ்ரீராஜப்பாபவாஸிநா ।
ப்ரதீயதாம்ப்ரஸாதார்த்தம் ப்ராஸ்தாவம் தத்ரதாயிநீ ॥ ௩ ॥

ஶோபநேவிபாஸ்வாஸ்தஸ்வாஸ்ராஜ்யம் ஸ்ரீ கைலாஸகிரிராஜத: ।
ஜய்ஸ்வாஸந்த்ரதக்ஷோண்ணாஸ்யேவ ஜேவிதாத்ர தா ॥ ௪ ॥

இராயபுரத்திலிருக்கும் மழவைத் திருவிளையாடற்

சுப்ரமண்ய பாரதியவர்கள் புத்திரர்

## ப்ரஹ்மஸ்ரீ இராமசுவாமி ஐயரவர்களியற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருவளர் செந்நெலுந் திகழ்தரு கன்னலு
முருகெழு கமுகுந் தெங்கோங்கிவா னளாவுறு
மருவிய நந்தா வனச்சோ லைகளும்
பெருகிய மாமறை போசா லைகளும்
பங்கயப் பூமலர்ப் பாயல்போல் விரித்
தங்கயற் றேறுக ளளிகளி னீட்டமு
நீங்கிறை யோடையு நிலவு தடாகமு
மேர்பல கொண்டுயர்ந் தேந்திய சிகரமொ
டாமதின் மண்டப மாளிகை யொத்திடன்
காமரு மங்கையர் கணிமையாடு கந்தமர்
வாழ்வுறு கோயிலு மறையவர் வீதியு
மேழ்நகர் வணிக ரிசைசந் திடுமாடமு
மெங்கினுஞ் சித்திர மியற்றிய கூடமுந்
தங்கிடு மவர்க்கூண் டருமறச் சாலையு
மன்னரும் பல்வளம் பரவிய விராய
மன்னகர் தன்னி னுடொறும் வாழ்மேவாய்
எண்ணுறன் கறங்களு மீயுந் திறங்களும்
விண்ணுறர் கணபதி வியந்துரை செல்வராம்
வணிகர்தம் மரபின மருவிய விரணியூர்ப்
பணிதருங் குலத்திற் பாங்கமர் வாழ்வாரு
சிதம்பரம் பெறுநாச் சியப்பன் றவத்தா
லிதம்பெற வருகதி ரேச வணிகன்
சந்ததி வேண்டித் தழைக்கும் புல்வாய்

# சிறப்புப்பாயிரம்.

ஆங்க மணிந்திடு குமரே சன்மேற்
பிள்ளைத் தமிழ்க்கவிப் பிரபந் தத்தைக்
கொள்ளைக் கவித்துழாங் கொண்டுவப் பெய்தவும்
வேண்டிய வன்னை நீண்ட புகழ்சேர்
வள்ளற் பெருங்கவி வான்புக ழேந்தியின்
விள்ளற் கரியதாய் விளங்கு மரபினன்
திருவுறு மலையா நிலம விளங்க
வாதாரம் பரையின் மயின்மலை மலையாக்
குன்றாக் குடியுள குன்றாக் குடிநகர்
நன்று மடமதி னண்ணிய வித்துவான்
பகர்ந்திடும் வீர பத்திரக் கவிஞன்
மகிழ்ந்திடு சுதனு மான்முத் தாசாமி
புத்திரன் வீர பத்திரக் கவிஞன்
சுருதிய பொருளைச் சுருதியின் வழிமேய
சுருதியுட் கமலக் கண்ணரை நிறீஇ
செய்ந்நல முந்தரு சொன்னலம் புணர்த்திக்
கல்வி லெழுமெனக் கன்னம திற்கொளப்
பனுவலினன் புலமையிற் றன்னின் மேலார்
சேயருள் கொண்டே சேயருள் செயவே.

---

இராயபுரத்திலிருக்கும்
இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவரான
**ப்ரஹ்மஸ்ரீ**
**ஆ. பஞ்சாபகேசய்ய ரவர்களா லியற்றியது.**

**நிலைமண்டிலவாசிரியப்பா.**

நீர்க்கடல் சுலவும் புடவியிற் சிறந்த
நீங்கரும் வளங்க ணிதமுறுஞ் சோழ

மண்டலந் தன்னிற் றொண்டமா னிசைகூர்ந்
தாசுசெய் புதுவை யம்பதி யடுத்த
சரசுலாம் புல்வய றணிலொரு தொண்டனுக்
காகமே பழனி யணிவரை நின்று
ஆகம தாகத் தண்டா யுதமுடன்
ஓங்கும் பிரணவத் துட்பொரு ளுணரா
தேங்கும் விதியை யிருஞ்சிறைப் படுத்தி
யத்தன் மொழியா லவன்சிறை விடுத்தப்
பித்தன் கேட்கப் பிரணவப் பொருளைக்
கூறிய குமரன் குக்குட கேதனன்
ஆறிரு கைய னணிபத மிரண்டினன்
தரணியின் மாந்தர் தம்வினை யகற்ற
விருதயத் தன்னி யெழுந்துடன் போந்து
மஞ்சுலாங் குமர மலையினின் மேவுங்
தஞ்சரி மருவுங் குமரே சன்மேற்
றென்னூறும் பாண்டி தேய மதிலார்
மன்னில வளமும் வாய்ந்தபொற் பதியாங்
குன்றக் குடியிற் குன்றக் குடியான்
மன்புக ழேந்தி வங்கிலைத் துதிமேத
யியலிசை நாடக மென்னுமுத் தமிழு
மியமுறு நாற்கவி நன்குறப் பயின்றும்
பற்பல நூல்கள் பாங்குற வியற்றியும்
விற்பன ரெவரும் விம்மித முறவே
நலமிகும் புலவர் நாமல வெனவும்
புலவர் சிகாமணிப் புங்கவ னெனச்சொல்
பாவலன் வீர பத்திரக் கவிஞன்
ஓவருந் தனத்தா லுதித்தருண் புத்திரச்
சாமிக் கவிஞன் சந்ததி விளங்கி
யாமிக் கோங்க வந்திடும் வீ[illegible]

பத்திரக் கவிஞன் பத்தியாய்ப் பிள்ளைத்
தமிழினைச சொற்றன் றரணியோர் செவிவா
யமிழ்திது வென்றே யருந்திட மாதோ.

---

இராயபுரத்திலிருக்கும் மழவைதிருவிளையாடற்
சுப்பிரமண்ய பாரதியவர்கள்பேரரும்,
சுப்பராமய்யர் குமாரரும், இந்நூலாசிரியர் மாணாக்கரு
ளொருவருமாகிய,
ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ணய்யரவர்கள் இயற்றியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகுவக்கும் புகழ்சேர்தென் பாண்டிநா டெனப்பெயர்பூண்
டுயர்கன் னிக்கோ
ரிலகுநுதற் றிலகமெனு மிறைநகர்வாழ் நாச்சியப்ப
னிரணி யூரிற்
குலவுசிவ புரந்தேவி யாட்கொண்ட நாதரருள்
கூட்ட முன்செ
யலகிறவப் பேறெனவே யவதரித்த சிதம்பரவேட்
கருமைத் தம்பி. (க)

இருந்தவத்தோர் பெருங்களிகூர்ந் திடக்கோயி லூரினமர்ந்
தெழில்வே தாந்த
மொருங்குணரண் ணாமலைச்சா மிக்கிலக்கு வற்குமுத
லுதித்த சீலன்
திருந்துதன பதிக்குமிருந் தனபதியா மென்ஞான்றுந்
செல்வ மோங்க

வருங்குவைவான் கதிரேச வணிகனெனத் திருநாமம்
வனை வள்ளற்கே. (உ)

புத்திரப்பே றுண்டாகி வாழையடி வாழையெனப்
புவியின் வாழச்
சித்திகருங் குமரமலைக் குகன்மேற்பிள் ளைத்தமிழைச்
செய்தத் தேவார்
அத்திருவின் முத்தமிழின் சுவையறிநா வலவரதி
சயிப்பப் பூவி
னெத்திசையும் புகழ்வீர பத்ரகவி வாணனரங்
கேற்றி னுனல். (ந)

---

காரைக்குடியிலிருக்கும்,

## ப்ரஹ்மஸ்ரீ சதாவதானம் பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

இயலிசைநா டகமூன்று தமிழினும்பற் பலதமிழ்க
ளிசைந்திட் டாலும்
உயர்வுநிறை பருவமிலாக் காரணத்தால் வள்ளிகொண்க
னுவக்கான் மேலு
நயமுதவா வெனத்தேர்ந்தே வீரபத்தி ரக்கவிஞ
னம்பி ஞேர்பாற்
செயமுதவுங் குமரமலைக் குகற்கொருபிள் ளைத்தமிழே
சேர்த்திட் டானே. (ச)

---

இராமநாதபுரம்

சிவகெங்கை யென்னும் உபயசமஸ்தான வித்வான்

வேம்பத்தூர் சிலேடைப்புலி

ப்ரஹ்மஸ்ரீ பிச்சுவய்ய ரவர்களியற்றியது.

வெண்பா.

பிள்ளைத் தமிழாய் பெருந்தமிழ்க்கெல் லாமிலைநேரார்
தள்ளையெனப் பாவலர்கள் சாற்றியே கொள்ளைகொளக்
கற்பனையாய்ப் புல்வயல்வாழ் கந்தற் குகந்துரைத்தா
னற்புகழ்சேர் வீரபத்தி ரன். (௧)

---

ஸ்ரீ விஷ்ணுபுராண நூலாசிரியராகிய

செங்நெற்குடி சாமிக்குட்டி ஐயரவர்களென்று பெயர் விளங்கும்

ப்ரஹ்மஸ்ரீ சுப்பராய ஐயரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாமேவி வளர்புல்லை வளநகர்வாழ் குமரமலை
மன்னி நாளும்
பூமேவு மானிடர்தம் பிணிதவிர்க்கு மாறுமுகப்
புனிதன் றேண்மேற்
றேமேவு செந்தமிழ்ப் பிள்ளைத்தமி ழாங்கவிமாலை
சிறப்ப வேய்ந்தான்
காமேவு மிராசநகர் தனில்வளரும் வீரபத்ரக்
கவிஞன் றானே. (௨)

---

## சிறப்புப்பாயிரம்.

ஜெடியார் கனிஷ்ட சகோதரர்

## ப்ரஹ்மஸ்ரீ வீமகவியவர்களியற்றியது.

### இணைக்குறளாசிரியப்பா.

பூவிருந் தொளிரும் புகழ்பெறு மதுவினை
வண்டினந் தேனு மகிழ்ந்தினி தருந்திச்
செவ்வழி பாட
நான்முகன் விண்டு நந்தியூர்ந் திடுவோ
னறுமுகத் தேவர்க் கடுத்திடு சத்திக
ளிறமென விளங்களிர் தளிர்முறி யிலைகளைத்
தன்னகத் தமைத்தக் கனிரியல் கண்கள்போற்
றீவிளி காட்டித் தேவர்த முலகுறை
வளர்தலை நோக்க வளர்ந்திடு மாண்மையின்
வயங்குந் தேமா மன்னிய குயில்கள்
மணவினை நடாத்தும் வளங்கெழு பொழில்சூழ்
தண்டுறைமா நகரிற் குலவிய திருவார்
அன்று மலைமா தினைத் தமர்ந்திடு
தலைமைப் புலவர் தங்குல மதனின்
மகுடமென் றோங்கி வந்திடு புலவன்
புகழினை யேந்து புகழேந் தியென்னும்
பெருந்தமிழ்ப் புலவனைப் போதகன் குலத்தின்
முதல்வனைக் கொண்டு விளங்கிய முதல்வன்
வீரபத் திரனெனு வியற்பேர் பெறு
மருங்கவிப் புலவனைச்
சலதரந் தாங்கு தடித்தது நீங்கிப்
புவியிடை யமர்ந்து பொற்கல சத்தினைத்
தாங்கிநின் றெல்குந் தன்மையின் மூலகளைத்
தாங்கிடு மயிலனார் சஞ்சரித் திலகும்

## சிறப்புப்பாயிரம்.

கடம்பொரு வீதியார்
இராய புரத்தி லிருந்திடு தனதன்
கரிணியார் வீதியி லணியூ ருடையான்
வைசியர் குலத்தின் வந்துவ தரித்தோன்
கதிரைமா நகரிற் கண்ணிய முதல்வன்
றன்போர் தாங்கு சதிருடை யறிஞன்
மதிதலைச் சுன்னின் மகப்பே றொழிப்பது
நிதியினை யருளு நின்மல மூர்த்தியாம்
புனிதமார் புல்லை பொன்மலை நியர்மலை
மேவிய குமரனை மெய்ப்பொருண் மீது
பிள்ளைத் தமிழினைப் பேருல கத்தோர்
மகிழ்ந்திடப் பாடித் தருகெனத் தந்தனன்
அறிஞரும் வியப்ப வமிழ்தென மன்றே.

---

திருமெய்யம் வைக்கீல்

### ப்ரஹ்மஸ்ரீ வயித்திநாதய்யரவர்கள்

இயற்றியது.

**எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

வளர்கலியு காப்தமையா யிரத்துப் பத்தின்
மருவுசீ லகவருடத் தையிலென் பக்கம்
கொளுங்கதிர்நா டிமைந்து சனையந் தெப்தி
குலவுபிரா னிற்குமர மலைமேவன் மீதி
ளமேகச னிகர்கதிரை சன்போ ரோங்கி
யாண்மகப்பே றுறப்பிள்ளைக் கவியைப் பாடித்
தளர்வறவே யீரப்த்ரக கவிஞன் விஜய
சபையொருங்கே மெச்சவரங் கேற்றி னானே.

---

மதுரை ஜில்லா

## கோட்டையூர் மீனாட்சி சுந்தரமய்யரவர்கள் புத்திரர்

## ப்ரஹ்மஸ்ரீ சுப்பய்யரவர்களால்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்த கடல்வளைக்கும் புவிமதிக்கும் புகழ்நலத்தாற்
செழுத்தோன் முல்லைத்
தார்பூத்த மணிநிறத்தான் றனைவணிகர் குலமணியாத்
தழைக்குஞ் சீமான்
கார்பூத்த கரதலத்தான் கதிரேச னெனும்பெயரான்
கருத்தின் வேண்டு
ஏர்பூத்த மொழிநயந்து மெழுவகைச்சீர்த் திபினுமொன்றும்
நாடி மன்னே. (௧)

பாரமலைத் திடுமிதழித் தொடைமிடையுஞ் சடையுடையான்
பரமன் பாகத்
தாரமலைக் கொருபுதல்வ னமரர்தமக் கொருமுதல்வ
னகில மெல்லாஞ்
சாரமலைத் திடவடுகை யசுரர்களைப் பொடிசெய்நெடுஞ்
சுணிவேற் கந்தன்
குமரமலைக் கொருதலைவன் சேயெனப்போர் கொளலாலக்
குழகன் மீதே. (௨)

கன்னமுதற் றிருக்கறுத்த மொழியுடையான் கலைமகடங்
கருணை யாகும்

வெள்ளமுத தியற்கவர்ந்த வெழிலியெலாக் கவிபொழியு
மேன்மை யாளன்
றெள்ளமுதத் தினுமிகுந்த மதுரமுற்ற தெனப்புலவர்
செவிவாய்த் தேக்கி
யுள்ளமுகத் தொடுபுகழச் சிறந்தபின்னோத் தமிழ்பாடி
யுயர்ந்தா னன்றே. (௩)

அத்தகைய பெருந்தகையா னியாவரொடு மினிதுரைக்குந் தாயின்
வகிலந்தன்னி
லொத்தகைய பெருவளமு முடைத்தாகி நிலைகெட்டோ
ரிழைபோன் மிக்கோர்
சித்தநய னங்களிக்கு மொழியுடைத்தா மிராசர்கள்
செழிக்க வந்தோன்
முத்தகைய தமிழ்களினுங் கவியுரைக்குந் திறந்தெரிந்த
முதன்மை யாளன். (௪)

நலமிகுந்த கலைகளெலா நராஸேயமா வறிந்தகமலா
னளினத் தாடங்
குலமிகுந்த புயமுடையான் முத்துச் சாமிக்கவிஞ
னுருற்றுஞ் செய்ய [களின்முற்
குலமிகுந்த தவத்துதித்தோன் கொடைக்கரத்தோன் குணங்
குணத்தைச் சார்ந்தோன்
புலமிகுந்த வீரபத்தி ரப்பெயரா னெங்காளும்
புகழ்மிக் கோனே. (௫)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

ஷையூர், பொ. அ. க. சிதம்பரஞ்செட்டியார்

குமாரர்,

சோமசுந்தரஞ்செட்டியாரால்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூங்கமலத் துறையயனார் போற்றவருள் புங்கவனாம்
பொல்லா ருய்யத்
தாங்கமலப் பரம்பொருளாங் குமரமலைக் கிழவனருங்
குருவே யென்னப்
பாங்கமலர்ப் பொழில்சூழ்கோ னகர்விர பத்திரமால்
பரிவிற் பெய்யுந்
தேங்கமலச் செய்த்தமிழ்மேற் கொளலாலப்பெயர் புலவோர்
செப்பினரே.

---

சிவமயம்.

# பருவத்தொகை.

## வெண்பா.

சாற்றரிய காப்புசெங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - யேற்றுசீ
ரம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

௧. **காப்புப்பருவம்:**—அஃதாவது, திருமால், சிவபிரான், உமா தேவி, விநாயகர், பிரமன், இந்திரன், இந்திரை, சரசுவதி, முப்பத்து மூவர், என்றிக்கடவுளரை, பிள்ளையைக் காக்கும்பொருட்டு வேண்டிப்பாடுவது.

௨. **செங்கீரைப்பருவம்:**—அஃதாவது, பிள்ளைகள் ஒருகாலை முடக்கி ஒரு காலை நீட்டி யிருகைகளையு நிலத்திலூன்றித் தலைநிமித்து முகமசைத்தாடு நிலை.

௩. **தாலப்பருவம்:**—அஃதாவது, பிள்ளைகளைத் தொட்டிலிற் கிடத்தி மாதர் நாவசைத்துப்பாடுநிலை.

௪. **சப்பாணிப்பருவம்:**—அஃதாவது, கையுடனேகை சேர்த்துக்கொட்டு நிலை.

௫. **முத்தப்பருவம்:**—அஃதாவது, பிள்ளையினது வாய்முத்தத் தைவிரும்பிக் கூறும் நிலை.

௬. **வருகைப்பருவம்:**—அஃதாவது, குழந்தையை, நடந்து ருக என்று அழைக்கு நிலை.

௭. அம்புலிப்பருவம்:—அஃதாவது பாட்டுடைப்பிள்ளையுடன் விளையாடவரும்படி மாதர்அப்பிள்ளையை யொக்கலிலிருத்தி வைத்துக்கொண்டு சந்திரனைச் சாமபேத தானதண்டங்களாற் கூறியழைக்குநிலை.

௮. சிறுபறைப்பருவம்:—அஃதாவது பாட்டுடைக்குழவியைச் சிறுபறை கொட்டும்படி வேண்டும்நிலை.

௯. சிற்றிற்பருவம்:—அஃதாவது சிற்றிலிழைக்குஞ் சிறுமியர் தஞ்சிற்றிலைச் சிதைக்கவேண்டாவென்று பாட்டுடைக் குழவியை வேண்டும் நிலை.

௧௦. சிறுதேர்ப்பருவம்:—அஃதாவது, பாட்டுடைக்குழவியைச் சிறுதேருருட்டும்படி வேண்டும் நிலை.

---

# அவையடக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தேன்றளிக்குங் கற்பகமா ரிறைமேவெங்கடக் குஞ்சரித்தோள்
சேர வேட்டு
மானகட்டி னுதித்திழிஞர் மனைவளர்கன் னியைவலிய
வாஞ்சித் தேனற்
கானினுற்றார் புலவர்சிகா மணியாமிந் நாற்குரிய
கடவு ளென்றால்
கானியற்றிப் புன்கவிநன் கவியெனத்தா மயவாரோ
நாவலோரே.

---

23568
(4020)

உ

# நூற்பயன்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடந்தோறு சலந்தோறுங் காணு மொன்றாங்
கதிர்போல வகண்டபரப் பிரமந் தானாய்ப்
படத்தோறு மோவியம்போ லுலகின் மாயா
பந்தத்திற் சிக்கிவினைக் கீடாய்த் தோன்று
முடத்தோறு முயிர்க்குயிராய் நின்றவெங்க
டனிமுதலன் படியருக்கே தாயனான்குக்
குடத்தோறு கொடியுயர்த்தோன் வல்லி தேவ
குஞ்சரிக்கு மணவாளன் குழகன் செவ்வேள். (௧)

பன்னிருசெங் கதிருதயஞ் செய்தா லென்னப்
பன்னிருபொற் குண்டலங்க ளிலங்கு காதும்
பன்னிருமா மணிவலயந் தரித்த வாகுக்
பன்னிருபொற் கிரியனைய தோளு நாளும்
பன்னிருதிண் படையகலா தமருஞ் செய்ய
பன்னிருகைக் கற்பகமுங் கருணை பூத்த
பன்னிருகண் மலர்முகமுங் கழலை யார்க்கும்
பன்னிருதா மரைப்பதமுங் கொண்ட கோமான். (௨)

செங்கமலை மணிமார்ப னயனுங் காணாச்
செழுங்கமலை வேணியற்குக் குருவாய் வந்த

## நூற்பயன்.

தங்கமலை நிகருமிணைத் தனத்தின் பாரந்
தயங்கமலைக் கோரிளஞ்சேய் தக்கோ ரஞ்சும்
அங்கமலைப் பொருவுநிறத் தவுண ராக்கம்
அடங்கமலை வளர்த்திடுங்கூ ரயில்விடுத்தோன்
கொங்கமலைக் கும்பொழில்வான் குலவ நீண்ட
குமரமலைக் குமரேசன் மீதிற் சாற்றும். (௧)

பைந்தமிழ்ப்பிள் ளைக்கவிப்ர பந்தந் தன்னைப்
பாருலகின் மன்பதையாய்ப் பிறந்தோர் தம்முட்
சிந்தையுறக் கற்றோருங் கேட்டோர் தாமுஞ்
செல்வமொடு நன்மகப்பே றுடைய ராகி
நிந்தையறப் பிணியகன்று பகையும் வென்று
நிகழிந்த்ர போகமுந்துய்த் தெவரும் போற்றச்
சந்ததமு மழியாத ஞான மோங்கிச்
சாயுச்ய பதந்தனையே சார்வர் மாதோ. (௨)

உ

கணபதிதுணை.

# குமரமலைக்

## குமரேசர்

# பிள்ளைத்தமிழ்.

பூமேவு சிமயப் பொலங்குவட் டிணைவலம்
புரியுமிரு சுடரொளி களைப்
பொன்மணிக் கிம்புரி மருப்பொன்றி னெறிகளும்
புவிமருங் குடைவா ரியைத்
தாமேவு முக்கட் பெருங்கருணை வாரியுஞ்
சலதரம் பொழியு மழையைத்
தனிஞான மதமழையு நுங்கமே லோங்கத்தி
சரணமல ரேத்தெடுப் பாம்
மாமேவு மாயிரத் தெட்டண்ட முழுதுமிறை
மருவநூற் றெட்டுயுக நாள்
வல்லாணை முன்செலுத் துஞ்சூர் தடிந்தும்பர்
மகிழுமணி முடியு மரசுங்
கோமேவும் வாசவன் கொண்டுவா னுடுசெங்
கோனுடை தாகவருள் செய்
குமரவெற் பமருமயின் முருகனற் புதவினிய
குமரனற் றமிழ்த்தழை யவே.

## காப்புப்பருவம்.

### திருமால்.

பொன்மேவு பதுமா சனத்தேவை யுதவிப்
புரக்குந் தொழிற்செய் வலவோர்
* போகிமணி முடியிற் கிடந்தொளிரு மகிபான்
பொழிக்குநா யகனமரி னிற்
கொன்மேவு மாழிவிட் டிதழியிட் டபிமனைக்
கொல்சிந்து பதியை மறுநாட்
குலவந்தி வருமுன் செகுத்திடுவ லென்றுசூழ்
கூறுபற் குனனுய்ய வா
னின்மேவு மோராழி யிரதம்விடு கதிரொளியை
யெல்லிற் புதைத்தரு ளிமுன்
னையாதி மூலமென வோலமிடு வாரணத்
தினையாளு மால்காக்க வே
தென்மேவு நேமியங் கிரிபொலங் கிரியிற்
சிறந்திமைய மலைபு நாணச்
சிகரமுய ரியகுமர மலையின்வளர் முருகனுமை
சிவைகவுரி யருண்மக வையே. (க)

### தியாகராஜர்.

புதிய நிலவொழு குமிள விதுநதி
புரிச டிலமே வாதியைப் பாற்கடல்
புலவர் கடையமு னெழும மரிபுகழ்
பொலிய மணிவா யேவுணப் போழ்த்தனர்
புணரி யிடையிடை யெறிதி வலைநுரை
பொருவு சிறுவாழ் வேயெமக் கோட்டினர்

---

* போகி = பாம்பு.

புன்ன மூயகரு புனைகை கொடுநிரி
    புரமெரியமா ருயபற் காட்டினர்
* அதுலை † விதுரர்பொ னசல விலரிமை
    யமலை சுனைததழு வாகர்மெய்ப் பார்த்தன்வி
டிகொண் முடியர்கை யபய வரதர்செ
    லரிணர் மழுவா ரோடுசெற் பாத்திரர்
அரிய யனுமடி முடிய ரிவரிய
    யலகி லொளிமீ கிழுறத் தோற்றினர்
அரவ விருகுழை யடுசெ வியரென
    வறைத ருதியா கேசரைப் போற்றுதும்
மதுப மிசைசெய்து மதுர கறையுநா
    வருகு மணநீ பாசலத் தோட்டிணை
மதுவ சனவன சரிவெ ளிபடகண்
    மருவு மணவா ளாவெனப் போற்றுநர்
மனதி லிளகிய பொருணை யுமைவிழி
    மணியை மணிசூழ் சோதியைச் சாட்குண
மலையை யெமதுயிர் நிலையை யருமறை
    வடிவை யடியார் மாசுகப் பேற்றினை
குதாக லமொடுக லகல வெனமணி
    குலிறு மடியார் கேகயச் சீர்ப்பரி
குலவி விழிபொழி கருணை மழையது
    குளிரு மலரா ருனனத் தூற்றிடக்
குறமு னிவனக மகிழ வருகுல
    குருவை யிகலோர் மாயையிற் சீற்றனைக்
குதலை மொழியின் மகவை யினியகு
    மரம லையின்வாழ் வேலனைக் காக்கவே. (உ)

---

* அதுலம் - உவமையின்மை. † விதுரன் - அறிஞன்.

## கமலாம்பிகை.

உலகினி * லுறவிமு † லைம்பன்மட் டீற்றுள
    உயிர்பல தொகைகளை யீன்றமெய்ப் பாட்டினள்
உததியின் வடவையி னெங்குகட் டுப்பொறி
    புகவரு நமனுயிர் வாங்கரக் கேற்பவள்
நிலையுணர் முனிவரர் காண்டவப் பேற்றென
    நிகழுமு தல்விதனை வேண்டுகிற் பார்க்கருள்
நிருமலி பயிரவி வேய்ங்குழற் பாட்டிசை
    நிகரறு கிளியின் மாங்குயிற் கூற்றினள்
சிலையமி னிழைபுரு வாய்ந்திடக் காற்றுகள்
    சிதறிட வழிநடை போர்நவற் சேர்த்தனை
‡ சிதமதி கதிர்பல தோன்றலிற் பூட்புனை
    சிமயவி மயமலை கான்றநற் பார்ப்பதி
அலைமகள் கலைமக ளார்ந்தகட் பூக்களின்
    அருண்மழை பொழிகம லாம்பிகைத் தாட்டுணை
அலரினை மனனுறு தீங்கறுந் தேத்துதுங்
    அணிகொள்கு மரமலை யெந்தலைக் காக்கவே. (௯)

## விநாயகர்துதி.

கங்குலெழு வன்னக் கருங்கொண்ட லென்னக்
    ¶ களேபரந் திகழுமிரு பான்
கரதலங் கொடுவெளிக் குன்றெடுத் தோன்கருங்
    காயம் § வெண் காய மீது
பங்கமுற வீசொரு மருப்பிரு முறக்கனம்
    பாய்மும் மதங்களுல் வாய்

---

* உறவி - எறும்பு. † ஆம்பல் - ஆனை. ‡ சிதம் - வெண்மை.
¶ களேபரம் - உடம்பு. $ வெண்காயம் - வெள்ளிய ஆகாயம்.

பரவஞ்ச கரமாறு சிரமெழு மணித்தோள்
படைத்தவே ழுத்தந்தனை வாம்
புங்கவர் பெருந்திருவை யெங்கள்குல வாழ்வைப்
புராந்தகற் கினிய செல்வப்
புத்திரப் பேற்றையடி யாருளக் கனியினொளிர்
போதமய மணிவிளக் கைச்
சங்கமா தவர்தேடு மாதபோ நிதியினைச்
சாட்குணிய வடிவ மோங்கு
சற்குருவை நற்குமர வெற்பரசை யற்பினொடு
சந்தத முகந்த ருளவே. (ச)

## பிரமதேவர்.

செங்கே ழடுக்கிதழ்ப் பைந்தேறன் மாந்துஞ்
சிலீமுக மலர்ப்பீட மேற்
றெய்வநான் மறையெனு மகாரைநா வென்னுநாற்
றெருவிலியந் தாயர் வேட்டு
மங்கருது மல்குற வளர்த்தெடுத் திடவந்த
மண்பொதுத் தந்தை நந்தை
மருவுமணி வண்ணமெய்ப் புயல்சூற் கொளாதருளு
மகலைப யகத்து ணினைவாம்
பொங்கேழ் கடற்புவன மியாவுநுதல் விழியிற்
பொடித்தங்க ழுழுது மீமப்
பொடிபூசி யெண்ணரு முயிர்த்தொகைக ளுய்யவருள்
புரிகுவா னட்ட மாடிக்
கொங்கேறு தாதகி தரித்தவெண் புயவரைக்
கோமா னளித்த புல்லை
குலவுநக ரேசனைக் குமரமலை வாசனைக்
குகனையருள் புரிய நிதமே. (ரு)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-90

## தேவேந்திரன்.

நறைமருவு கற்பகத் தாரணி புயக்குன்றி
னுளுமயி ராணி கொம்மை
நகிலந் திளைத்துமவ னிதயமுத மொடுநீர
* நரலையரு ளமுத மாந்தி
பிறைமருவு பனிவரை முகட்டெழு கருங்கொண்ட
லெய்ப்பவோங் கயிரா வதத்
தெருத்தமிசை வருவான் மருத்துவ னிணைச்சரண
மிதயத் திருத்தினை வாம்
பொறைமருவு மயில்கே டகங்கண்டை நளினமுயர்
பொற்புறுந் தண்டு சேவல்
யோரிடங் கம்பகழி வாளபய வரதம்வீற்
பூணுமா றிருகரனை வெண்
பிறைமருவு செஞ்சடைக் கயிலைப் பிரானெம்
பிராட்டிக்கு மகவாகி வான்
பிறங்கிவர் குமரப் பிறங்கல்வரு சண்முகப்
பிள்ளையைக் காக்க வென்றே. (௫)

## திருமகள்.

### வேறு.

தரங்க மெறிபாற் கடலுதித்துச்
சலசத் தனிமா ளிகைதழைப்பத்
தாமோ தரப்போர்க் கொழுகொம்பிற்
றனியே படர்ந்தா ரன்பரக
வரங்கத் தளியாற் காலைசைப்பா
லாடல் புரிந்து பின்னருள்பூத்

* நரலை - கடல்.

23568 (१०२०)



தழுகின் மதவேட் கனிபழுத்த
வரும்பொற் கொடியி னடிதொழுவாம்
கரங்க மீரா றுறிஞொடு
கமல விமலத் தடந்தோன்றிக்
ககனத் தறுமீன் முலையமுதங்
கனிவா யருந்திக் களிகூருங்
* குரங்க மானு மதிமானுங்
கூர்ங்கண் முகக்குஞ் சரிமானுங்
குறப்பெண் மானு மகிழ்குமரக்
குன்றம் மானைப் புரந்திடவே. (எ)

## கலைமகள்.

### வேறு.

பொறிதங்கு மார்பகப் புத்தேளி னுந்தியம்
பூவுதவு நான்மு கத்துப்
புங்கவ னுடன்முதுக் குறைவாளர் மணிநாப்
புறத்திருந் தேழுல கமுஞ்
செறிதங்கு நல்லொளி யெழுப்பியிசை யொடுகித்
திலப்பணித ணிலை வெறிப்பச்
சின்முத் திரைக்குறியை யங்குலிகொண் முண்டகச்
செல்வியை நினைந்து தொழுவாம்
முறிதங்கு கற்பகா டவியுழக் கிக்கோடு
மூதண்ட முகடு பொத்து
முனைமுகத் தெவ்வஞ்ச வன்னெஞ் சிடித்துலைவ
முரணுற விசைத்து லவுதிண்
† கொறிதங்கு பிடரேறு சேவகத் திறல்கொண்ட
கொற்றவயி லுற்ற குமரக்

---

* குரங்கம் - மான். † கொறி - ஆடு.

* கோமா னெவர்க்குமுயர் கோமா னிசைப்பரிய
குமரேச னைக்காக்க வே. (௯)

## சத்தமாதர்கள்.

விடைபுவனை மஞ்ஞைவா ரணமல்கை யோதிமம்
விறற்சிங்க வேறு கைத்து
வில்லாழி யெஃகம்வச் சிரமுத் தலைக்கழுமுள்
விரிபுமறை கூரலத் தின்
படைகொண்மா கேச்சுவரி நாரணிகௌ மாரிவான்
பாவிந்தி ராணி யுக்ர
பயிரவியொ டபிராமி வாராகி யெழுவிரு
பதுமசர ணங்களினை யாம்
நடையைவே றற்குறு மனப்பெடைகள் கண்டுள்ள
நாணமீக் கொண்டு படரும்
நல்லுடைப் பிடிநடைக் கொடியிடைக் கடைசியர்
நறும்பணைசெல் சோறுடனை
தடைவாயின் முகிலொலி படங்கமளி முழவங்
கறங்குமா டங்கொள் புல்லைக்
ககனிஞ் சையர்பரவு குமரவொண் கிரிமருவு
கமழ்கடம் பனைய ருளவே. (௧௦)

## முப்பத்துமூவர்.

### வேறு.

மலர்த்தலைப் புவனத்தும் வானகத் தினுமுள்ள
வல்லிருட் டொகுதி யகல
வான்மதிக் குரியசெங் குமுதங்கள் குவிதர
வயங்கொளி பரப்பி யெங்கும்

* கோ - மலை.

பொலியுமா திருவர்பதி னொருவரெண் வசுக்களொடு
புகழ்மருத் துவரிரு வராம்
புத்தேளிர் வர்க்கமுப் பத்துமுக் கோடியவர்
பொற்பதத் தைத்துதிப் பாம்
அலகில்புற் பலவுயிர்த் தொகையனைத் துந்தந்
தளித்தவையி லயமா தரு
காதிமந் யாந்தரகி தப்பொருளு மா *யுழுவ
லடியவர்க் கெளியவுரு வாய்க்
குலவியவ ரவர்மனக் கோதகற் றிக்கதி
கொடுத்தற்கு வந்த புல்லைக்
குழகனை நியமகனைக் குலிசன்மகள் கொழுநனைக்
குமரமலை யனைய ருளவே. (௧௦)

காப்புப்பருவம் முற்றிற்று.

---

## செங்கீரைப்பருவம்.

பூரண விலாசமுக் கட்கருணை யமுதமும்
புரிசடை யிலங்கு திங்கள்
பொங்கமுத முங்கங்கை யமுதமொடு விரவிப்
பொலிந்தவா னந்தவுரு வாம்
நாரணா யற்கரிய காரணக் கடவுள்வாழ்
நற்கயிலை வெற்பு மேனை
நகிலப் பயம்பாய வளர்மா கதக்கொடி
நயந்தவிம யாசல முடன்
வாரணங் குலவுமந் தரசயில மைநாக
வரையிரவி மதிய மென்றும்

---

* உழுவல் - விடாது தொடர்ந்த அன்பு.

வலஞ்சுலவு பொன்மகா மேருமலை யஞ்சக்ர
வாளகிரி முதலெலா வைக்கும்
சிரணி மணித்திலக மாங்குமர மலைமுதல்வ
செங்கீரை யாடியருளே
தில்லையம் பகவனருள் புல்லையம் பதிமுருக
செங்கீரை யாடிய ருளே. (௧)

கதிகொண்ட செஞ்சூட் டடைக்கிரண பானுவெங்
கதிர்பாய வொண்பருக் கைக்
கண் * முளரி முளரியந் தாள்பாய வேனலங்
கானகம் நடந்து தனமேற்
றதிகொண்ட சேற்கட் குறக்கொடி புறக்கண்டு
ஆவிதழுப் பருகி வதுவைத்
தொடையளித் தற்கா தரங்கொண்டு வாதாடு
சொல்லிற் கிணங்காமை யான்
மதிகொண்ட செஞ்சடைக் கடவுண்மத வாரணை
மருட்டித் துரத்த வஞ்சி
வஞ்சியுங் கெஞ்சியணை யக்கொஞ்சி மணிமுலைபின்
மருவுமன் னிருவா கனே
† திதிகொண்ட மான்மருக குமரவே தண்டகுக
செங்கீரை யாடிய ருளே
தில்லையம் பகவனருள் புல்லையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. (௨)

பத்திவிதை வித்தியா னந்தநீர் விட்டுநற்
பயனுறக் கருதுமடி யார்
பதுமவித யக்கோயின் மேவியழி யாமுத்தி
பற்றியே றற்கேணி யாம்

* முளரி - முள். † திதி - காத்தல்.

நித்தியத் துவமான மெய்ஞ்ஞான வன்னெறியு
　　ணேயமுறு வான்கரு ணையி
னிலைமையீ தென்னவறி குறியாற் றெரித்தருளு
　　நிமலசற் குருநா தனே
பித்திகை நிரைத்தமணி மாடமிசை வண்கொடி யண்ட
　　பித்திகை துளைத்தண்டர் கால்
பின்னலா னானரம் பையருக்கு வெள்குறும்
　　பெற்றியுட் கொண்டுதிகை யாச்
சித்திரம் போலுறப் புரிகுமர மலையதிப
　　செங்கீரை யாடிய ருளே.
தில்லையம் பகவனருள் புல்லையம் பதிமுருக
　　செங்கீரை யாடிய ருளே. (௯)

கருமா னிடங்கலந் தவெசம் மானைக்
　　கரத்திட்ட கடவு ணெற்றிக்
கண்ணினுகு மூனிரு புலிங்கத்தை யுலவைவெங்
　　கனலியந் தேவிமே றெடப்
பெருமா னிருங்கருணை வலியா லெடுத்துப்
　　பிறங்கு திரை மணிகொழிக்கும்
பீடார் பகீரதி விடுக்கவோ ராறுருப்
　　பெற்றுர லறுவர் முலையுண்
டிருமாறு மாறும்விழி யுமையாண் மகிழ்ந்தொருங்
　　கிருகர மணைக்கவும் பின்
னிருகர முடன்சண் முகங்கொளோர் வடிவிசைந்
　　தினிதாடல் புரிவ தேய்ப்பத்
திருமான் வியக்குந் திருக்குமர மலையாளி
　　செங்கீரை யாடிய ருளே
தில்லையம் பகவனருள் புல்லையம் பதிமுருக
　　செங்கீரை யாடிய ருளே. (௰)

ஓராறு முகமுடன் பன்னிருகை யுங்குலவ
உயர்கங்கை மருவி நாளும்
ஓங்கமலை யோடெவின் பார்வதித ரப்போந்
துளாவியயில் வேலை யுறலால்
நீ * ரா ரலைத்துடைக் குந்தரத் தாற்காண
நீள்கதி தனைக்காட் டலா
னிகழுமா றிக்குமறை யின்பொரு ளுணர்த்தலால்
நிகரினிற் சாருவார் நின்
பேராயி ரங்கொண்ட விண்டுவு முரைப்பரும்
பேறநாஞ் சாரு பமே
பெறுமா றெனப்புரவு வார்சியந் திண்ணமென்
பெற்றிதெரி வித்தல் போலச்
சீரார்சு வேதந்தி ரூழ்குமர மலைவாச
செங்கீரை யாடி யருளே
தில்லையம் பரவனருள் புல்லையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. (௫)

வேறு.

இமையோர் மருவர மகளிர் முகமொரி
மிதயங் களி கூற
வெழுதோ ணிசிசர மடவா ரழும்விழி
யிணைகள் சிவந்தா ரச்
சமரே றியபுய வலியார் நிருத
தளங்களு டன்பொரு சூர்
தனைவா ரணமுக னரிமா முகமுறு
தானவ னாதிய ரை

---

* ஆர் - பூமி.

புனைநா புரநவ மணிகாஸ் மடவிய
    ருத்தவொன் பதா விர
ருடனே சென்றயர் புரியா வென்றிகொ
    ளுடம்பர்க டம்பொரு மான்
அமரா வதிபுகழ் குமரா சலபதி
    யாடுக செங்கீரை
அல்லற் றவிர்பதி புல்லைக் கதிபதி
    யாடுக செங்கீரை. (௮)

சிலப் பழமறை யோலிட் டுணுகனி
    தேடற் கரியபொருளா
தேவர்க் குறுதுப ரோடச் சிறையது
    தீரக் கருணைசெய்வோய்
மேலைக் கடலர சேசைச் சதிலைய
    வேலைப் பருகியுற
வெவிட் டறுகிய காலத் துயரிய
    மேருச் சிலைதகரக்
கோலப் படைகொடு மோதிக் கிரியிறை
    கூசப் பொருள்கொளைசெங்
கோலைப் புரிதரு கோனுக் ரவபூதி
    கூடற் கதிபதியே
யாலக் களனினி தாகத் தருமக
    வாடுக செங்கீரை
அல்லற் றவிர்பதி புல்லைக் கதிபதி
    யாடுக செங்கீரை. (௭)

வீழிக் கனிதுவர் வாயுற் பலம்வீழி
    மென்குயி லஞ்சுகமும்

வேறற் கரிதென வோடப் புரிமொழி
விண்மரு குஞ்சதையின்
கூறக் கிசைபயி லியாழக் கிணைபகர்
குஞ்சரி தன்பதியே
கோவைக் கவியவை பாடக் கருணைசெய்
கும்பிமு கன்றுணைவா
ஊழிக் கடைவளி யோவிற் றெனவளி
யொன்ற விருஞ்சிறையா
ஞேதக் கடலெழ மோதிக் கடையன
லுண்க ணிரண்டையுமார்ந்
தாழிப் புவிபுகழ் கோழிக் கொடியவ
ஆடுக செங்கீரை
அல்லற் றவிர்பதி புல்லைக் கதியதி
யாடுக செங்கீரை. (௮)

கூடனுர் மதிசிர மானுர் கரமலர்
கொண்டார் மைந்தாநின்
கொங்கலர் செஞ்சர ணம்புய நம்புவர்
கொண்டா டுந்தேவே
வானு றதினுகள் சேல்பாய் தடமலி
* வண்டா னஞ்சூழும்
வண்டலை தண்டலை கொண்டலை யளவி
வளர்ந்தா னந்தாத
மேனு டதினுயர் சோனு டமுகுற
மின்பார் வந்தாய்நல்
வெண்கரி தங்கரி சங்கரி மருக
வியன்கூர் விண்டேவர்

* வண்டானம் - நாரை.

சேனா பதிபர னானோ தயவர
செங்கோ செங்கீரை
செல்வத் திருவளர் புல்லைக் கதிபதி
செங்கோ செங்கீரை. (௯)

நவமும் புரிகில மரபுந் தழைசுத
சந்தா னந்தாநற்
றமர்தந் தைபெரு கினையன் றிலையடி
தந்தா னெந்தாயென்
றவிழ்நெஞ் சகமல ருருகும் படியெம
தன்பே யன்பேயென்
றவர்சஞ் சலமற வருளுஞ் சுருதியி
னந்தா கந்தாவெம்
பவனம் பயில்விசை மயிலின் யிடமர்
யண்பா நண்பாரும்
பரசங் கரகுரு குறமங் கையுமகிழ்
பங்கா சிங்காரா
சிவமான் குமரமலையின்வந் தமர்குக
செங்கோ செங்கீரை
செல்வத் திருவளர் புல்லைக் கதிபதி
செங்கோ செங்கீரை. (௧௦)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

## தாலப்பருவம்.

### வேறு.

பூகம் பழுத்த நறுந்தாற்றிற்
புயலார் தெங்கின் பழம்வீழப்
பொருது சிதறிப் பொய்கையின்வாழ்
புள்ளின் குலத்திற் படவிரிதன்
மோகம் பழுத்த வாடவர்தோன்
முயங்கு மடவார் நகையொழித்தும்
முற்றுந் துறந்த மூதறிவான்
மூவா வின்பம் பெறற்கெண்ணி
யோகம் பழுத்த நெஞ்சகலா
* வுறவ ரனையத் திகழவின்மட்
டுயர்தண் டலைசூழ் சோணாடா
வும்பர்க் கதிபா ளவாவென்
போகம் பழுத்த புல்லைநகர்ப்
புனிதா தாலோ தாலேலோ
புனமான் றந்த தெறமானைப்
புணர்வாய் தாலோ தாலேலோ. (௫)

ஏமா சலத்தைச் சிலையெனக்கொண்
டிமயா சலத்தின் மகட்புணரு
மெம்மான் கையா வரிமேபார்க்கு
மியமா னிகமா கமப்பரவுங்
காமா ரிசெழுங் கமலமலர்க்
கைமாங் கனியைத் தரவேட்டுக்
கருதற் கரிய புவனமெலாங்
கணத்திற் சூழ்ந்து வருநீபத்

* உறவர் - முனிவர்.

தாமா விரிஞ்ச னொடுபரந்
        தாமா தியரும் பணிந்தேத்துந்
தரமார் * நவிரப் பரியூர்கந்
        தரமார் தருசண் முகத்தரசே
பூமான் பாமான் புகழ்புல்லைப்
        புரியாய் தாலோ தாலேலோ
புனமான் றந்த குறமானைப்
        புணர்வோய் தாலோ தாலேலோ. (௨)

எள்ளார்க் கருட்சிந் தாமணியே
        யிகழ்வார் மருட்சிந் தாமணியே
யிமயா சலக்கற் பகக்கனியே
        யீன்ற வான்கற் பகக்கனியே
நள்ளா ருரத்தொரு மித்துருவே
        ஞட்டுமன் பர்க்கொரு மித்துருவே
மவிழ்ற் றடைந்தார்க் கரும்பொருளே
        நாலு வேதத் தரும்பொருளே
விள்ளார் கடப்பத் தாரணிவாய்
        விண்ணோர் கடப்பத் தாரணிவாய்
வெஞ்சூர் தடிந்த வாகையனே
        மிளிர்பன் னிரண்டு வாகையனே
புள்ளார் மலர்ப்பூந் தடப்புல்லைப்
        புரனே தாலோ தாலேலோ
புனமான் றந்த குறமானைப்
        புணர்வோய் தாலோ தாலேலோ. (௩)

மகத்திற் சனிபோற் பிறவிதொறும்
        வரும்வெவ் வினையிற் பட்டுநொந்தோர்

---

* நவிரம் - மயில்.

மயங்கித் தியங்கிக் காலமெலாம்
வறிதிற் கழித்தே மையவினி
யிகத்திற் பரத்திற் பெறுஞ்சுகத்தி
லிச்சை யுடையே மல்லமுன்று
ளிணையம் புயத்திற் கன்புசெய
விசைந்தே மென்பார்க் கருண்முதலே
சகத்திற் றோன்று மன்பதைசஞ்
சலமார் வந்தித் துவமகலத்
நடுத்தெவ வரமுந் தரக்குமர
சயிலத் தெழுந்தோய் தனியில்பெரும்
புகழ்க்கா கரமா யிலங்குபுல்லைப்
புரியாய் தாலோ தாலேலோ
புனமான் றந்த குறமானைப்
புணர்வோய் தாலோ தாலேலோ. (௪)

கன்ன லொடித்துக் கடாவடித்துக்
கருங்கா லுழுந ருழுஞ்சாலிற்
கமலத் தரும்பு மரும்பொடுசெங்
காவி யரும்பின் முருக்கவிழப்
பன்னு மிசைவண் டினமுசும்
பதும நாளங் கடைசியர்செம்
பதுமத் தடிபின் னலிற்பெயர்ந்து
படரா நிலைகண் டவணூரும்
அன்ன மனையார் நடைக்குழன
மாற்று ததிநா ளுற்றனமீ
தற்ற மாமே ளனஞ்செயற்கென்
றூர்க்கும் பணைசூழ் சோணாடா
பொன்னின் மருவு புல்லைநகர்ப்
புலவா தாலோ தாலேலோ

புனமான் றந்த குறமாதினைப்
புணர்வோய் தாலோ தாலேலோ. (௫)

வேறு.

கலகச் சமணிருழ் சமயத் துறையொடு
கவிழப் படுகுழியிழ்
கழையைச் சுளிமத கயமொத் திடுகவு
ரியன்மெய்ப் படுமுதுகூ
னலையக் கணைநிமிர் தரவைத் ததிசுர
நலிவெப் பறவருளா
நதியிற் பெருவழு னடுவிற் பொறி * யிதழ்
நகவிட் டிசைபரவப்
பலபொய்த் தொழில்புரி யமணப் பதிதர்கள்
பல்மற் றுயர்கழுவிற்
படவிட் டொருசிவ சமயப் பயிர்நனி
பலுகத் தமிழ்மதுரைத்
தலனிற் கிருபையெனு மழையைப் பொழிமுகில்
தாலோ தாலேலோ
சமரத் தயிலவ குமரச் சிலையிறை
தாலோ தாலேலோ (௬)

விறவிற் பொலிதரு தரளக் குழையொளி
வீச நறுங்குமுதம்
விகசித் தெழுமது மலரிற் கடைசியர்
மிளிர்செந் துகிர்நிகர்வா
யிதழொத் தலினறை மிசையத் தெருளறி
வின்றளி சூழ்பணையோ

---

* இதழ் - வடு.

டெழில்விட் புலமொடு படர்தற் கரிதென
வென்று பசும்பரிகட்
புதையப் புதுமலர் பொழிகட் புனலொடு
பூந்தா துகள்சிதறும்
பொழில்கற் பகவன நிகரக் கெழுமிய
புல்லை வளம்பதியாய்
* சதபத் தெனும்விழி யவனுக் குமருக
தாலோ தாலேலோ
சமரத் தயிலவ குமரச் சிலையிறை
தாலோ தாலேலோ. (௭)

விண்டல மண்டல மண்டல மும்புகழ்
வீரா தாலேலோ
விஞ்சையர் விஞ்சை மகம்புரி விஞ்சையர்
விமலா தாலேலோ
கண்டகர் தங்குடி கண்டகழ் வேலதி
கண்டா தாலேலோ
கங்கை யணிந்தவொர் கங்கையன் மைந்த
கடம்பா தாலேலோ
† தொண்டக மாயவொர் தொண்டக மானவர்
தொண்டா தாலேலோ
துங்க மிகுஞ்சிகி யொண்பரி தங்கு
சுரேசா தாலேலோ
தண்டரு தண்டலை சூழ்தரு புல்லைத்
தலைவா தாலேலோ
சமரத் தயிலவ குமரச் சிலையிறை
தாலோ தாலேலோ. (௮)

* சதபத்து - ஆயிரம். † தொண்டகம் - அநாதிமலம்.

கொண்டல் படிந்தபி லுங்கட லுண்டவர்
குருவே யருவுருவே
கும்பிடு செங்கையொ டன்பர் பணிந்துரு
குதலாய் சிவமதலாய்
வண்ட ரலம்பு கடம்பி வரும்புய
மலையே மிலைவோனே
வஞ்சிம ருங்கிடு குந்தன குஞ்சரி
வரனே சுபகரனே
கண்ட மகண்ட மடங்கலு நின்றருள்
கரியே மதகரியே
கண்களி கொண்ட விளங்கனி றென்றிய
கதிர்சூழ் மழகதிரே
ஏண்ட விருங்கதி விண்கரி தன்பதி
தாலோ தாலேலோ
ஈமரத் தயிலவ குமரச் சிலையிறை
தாலோ தாலேலோ. (௮)

## வேறு.

அனித்த பிறவிக ளெடுத்து மிகமிக
வலுக்கும் வகையினி நாடாமே
அடக்கு கமட மதுறுப்பி னிகழ்பொறி
யடக்க நிதநிதம் வாடாமே
பனிப்ப வுடல்புள குதிப்ப விழிதுளி
பனிப்ப வரவட நீரூரப்
பரத்வ நிலையக மடுத்து முயர்துதி
படித்த குழறிய நாவோடே
யினித்த பலகனி யவற்பொ ரிகடலை
யிசைத்த நறுநறை பாலோடே

யிதத்தி னடியவர் படைக்க வரமரு
ளிபக்க டவுளின் யோனேவான்
றனைத்த குவர்குல முழக்க வடுதுயர்
தவிர்க்க வருகுக தாலேலோ
தழைத்த குமரச யிலத்தி னினிதவ
தரித்தி டுகுழக தாலேலோ. (௧0)

தாலப்பருவ முற்றிற்று.

---

## சப்பாணிப்பருவம்.

பன்னரிய தரளங் கொழிக்கும் பகீரதி
பயந்தவே ளெனுமகவை யுட்
பரிவினொடு காண்டற்கு முக்கனிமு தற்கொடுசெல்
பரிசின்வரு வெண்கு டிளையிற்
பொன்னின்மலி கற்பகா டவியினறு நீழற்
பொலிந்தவா னரம களிர்தம்
பொற்பை விண் * ணரமகளிர் கண்டுக ணிமைக்கிமை
பொருந்தாது நோக்க நோக்கி
அன்னநடை யந்நில மடந்தையர்த மினமென
வணைந்துநீ ராட்ட யர்தரும்
அமரர்தம் பதிகுலவு மளகையம் பதியொடு
மனந்தனுறை யும்பதி தொழத்
தன்னிகர் தரும்புல்லை சேர்குமர வெற்பினிறை
சப்பாணி கொட்டி யருளே
சத்தாகி யுயர்ஞான வித்தாய் முளைத்தவா
சப்பாணி கொட்டி யருளே. (௧)

---

* விண்ணரமகளிர் விண் - நரமகளிர்.

வண்ணச் செழுங்கமல முகைவிண் டளிக்குழா
மதுவுண்டு பாண்முரலு மோர்
வாவியின் மணிக்கூல மேவிவிண் ணாரச்சு
வத்தநின் றோர்பா சடை
யொண்ணப் பிணிற்கரையின் வீழ்ந்துபப் பாதியிலை
யோங்குமீ னம்புளூ ருவா
யொன்றையொன் றீர்த்திடும் வியப்புநெஞ் சீர்ப்பச்செய்
யோகம் பிழைத்த தெனவே
யெண்ணியிப் பாரிடத் தினிவரு பிழைப்பின்
றெனப்பெரும் பாரிட மெடுத்
தேகிப் பொருப்பின்முழை யுய்ப்பமா ழாந்துதுதி
யேற்றுநக் கீரனுய்யத்
தண்ணற் பெருங்கருணை புரிகுமர மலையதிப
சப்பாணி கொட்டி யருளே
சத்தாகி யுயர்ஞான வித்தாய் முளைத்தவா
சப்பாணி கொட்டி யருளே. (௨)

கோடரங் குதிகொண்டு லாவுவேய் மருவிருற்
குலமுடைந் தொழுக வொழுகுங்
கோற்றேனு நீள்பணைப் பருமப் புழைக்கைகொடு
கூர்ங்கோட்டு மத்தமத மாச்
சேடகத் தும்பருறை கற்பக மலர்க்கான்
சிதைத்துழக் கலிறொழுகு செங்
தேறலு முதிர்ந்தமுக் கனிவெடித் தொழுகுதீந்
தேறலு மொருங்கள வளாய்
நீடலை செறிந்ததிர்ந் தோங்குதே னருவியாய்
நீரருவி யோடுற்று நா
ணிலனும் புதைப்பப் படர்ந்தேரி வயல்குள
நிரப்பிவெங் கலியக லவே

சாடுபு வளங்குலவு குமரமலை யாதிபதி
சப்பாணி கொட்டி யருளே
சத்தாகி யுயர்ஞான வித்தாய்முளைத்தவா
சப்பாணி கொட்டி யருளே. (௯)

மண்ணில்வா ழெண்ணரிய மன்பதைக் குலமொடுபொன்
வளநகர்க் கதிப னுய
மகபதியும் விஞ்சையர் வணங்கிரு நிதிக்கிழான்
மற்றைவா னமரர் தம்மின்
உண்ணரு மருந்துண் டருததம் பிணிநிலை
யுணர்ந்துநின் றிருவி னெய்தி
யுயர்ஞான பண்டித னெனப்பரவி யங்நோ
யொழிக்கவரு வாரை நோக்கிக்
கண்ணகன் ககனப் பரப்புவட் டத்தென்று
கவனமாக் கடவி வினதை
கான்முளைத னற்றகான் முளைமுழுக் காலுறக்
கருதிவர லொப்ப வலமார்
தண்ணிய மலர்த்தாரு சூழ்குமர மலையதிப
சப்பாணி கொட்டி யருளே
சத்தாகி யுயர்ஞான வித்தாய் முளைத்தவா
சப்பாணி கொட்டி யருளே. (௰)

வானகத் தினைவசுந் தரையாய் வசுந்தரையை
வானகம தாக வேலா
வலயம் பொருப்பா யடுக்கன்முந் நீரதா
மார்த்தாண்டன் வெண்மதி யமாய்ப்
பானிலா மதியிரவி யாயணுவை மேருவாய்ப்
பகர்மேரு வணுவாய்ப் புறப்
பவ்வமாய்ப் புவனியைப் புவனமா கப்புறப்
பவ்வத்தை வடவை நீராய்

ஞானியர்க ளும்பர்க ளெவர்க்கேனு மொருகன்ன
　　னண்ணுமயு தத்தி னென்றி
முள்பலப் பலசெலவு மாயஞ்செய் கிரவுஞ்ச
　　நகமுந் தகர்த்த வடிவேற்
றுணையணி செங்கரங் கொடுகுமர மலையதிப
　　சப்பாணி கொட்டி யருளே
சத்தாகி யுயர்ஞான வித்தாய் முளைத்தவா
　　சப்பாணி கொட்டி யருளே. (௫)

## வேறு.

சீரிதழ் நளினத் தளியிற் குலவிய
　　செய்யவண் மணிமார்பச்
செம்மலு மொள்ளிய வெள்ளிய சலசைச்
　　செல்வனு மைந்தரு மாழ்
கார்முகி லூர்திக் கடவுட் குலிசக்
　　கடவுளி லேகரு மாய்க்
கதறக் கதற வரக்கை யியறறு
　　கடும்பணி யாலினையாப்
பாரி னெமக்குமை யன்றியொர் புகலிலை
　　பார நமக்கடியார்
பரம தயாளு வெனக்குறை கூறப்
　　படருஞ் சூர்மாவைக்
கூரயில் கொண்டு துளைக்க விடுத்தவ
　　கொட்டுக சப்பாணி
குமரச் சிலைமதி யமரர்க் கதிபதி
　　கொட்டுக சப்பணி. (௬)

தவளக் கரிமிசை வருசக் கரனரு
　　ட்டுணையை தனக்குவடுந்

தகரத் தளவணி யளகக் குறமயி
றடமுலை யின்குவடுஞ்
சுவடுற் றிடமணி தழுவத் தழுவிய
தோள்வடி வன்றிவழுச்
சொலுதற் கிலையென வொளிர்மெய்ச் சிவகுரு
துன்புசெய் தாரகனு
மவுணக் கொடியன துடலைக் கிழிய
வடர்ந்துகு செம்புனனீ
ரதியுக் கிரமொடு பருகித் திசைதிசை
யஞ்ச மடங்கல்வரு
குவதொப் பெனவொரு மயிலைப் பயில்கர
கொட்டுக சப்பாணி
குமரச் சிலைவதி யமரர்க் கதிபதி
கொட்டுக சப்பாணி. (எ)

பதகத் தொழில்புரி குநரைப் படவெம
படர்கைப் படவுதவிப்
பவமுற் றியகொடு நரகுக் குறுதி
படுத்துவ தெப்பொருண்முற்
சதுர்வத் திரனரு ளுலகிற் றனமனை
தரைநச் சுறுமனதைத்
தருவித் தொருநெறி தனில்விட் டுறுகனி
சருகிலை நீர்பருகி
யுதகத் தெரியெரி நடுவிற் றலைகீ
ழொன்றியு நின்றுமிருந்
துயர்மெய்த் தவமுயல் பவர்கிட் டையின்முடி
வொன்றெதெ னெஞ்சுருகக்
குதலைக் கிழவிசொன் மகவெ தியாவுநீ
கொட்டுக சப்பாணி

குமரச் சிலைவதி யமரர்க் கதிபதி
கொட்டுக சப்பாணி. (௮)

பங்கய மியாவுமெ மூங்கெம தையநின்
பணிமதி முக நோக்கிப்
பகரி னிதற்கி டிலையா மென்று
பயத்தொடு பங்கமரீஇச்
சங்கையி லாவளி கண்ணீ ராறு
தழீஇயு மதிப்பகையாற்
றலைநா ணுறல்கொண் டிதழ்வாய் மூட
றவாதற வெய்த்த னமா
லங்கணின் முகசா ரூபம் பெறவரு
ளாயென வொருதாணின்
றரிய வனந்தனி லுரிய தவஞ்செய
வாற்றிடு கவினுடையாய்
கொங்கலர் நீப மணிந்தபு யாசல
கொட்டுக சப்பாணி
குமரச் சிலைவதி யமரர்க் கதிபதி
கொட்டுக சப்பாணி. (௯)

தெண்டிரை நீர்நிலை யோடையி னோக்குநர்
சிந்தை கவர்ந்தெழிலிற்
றிகழெழி னம்புய முற்றந் நீரொடு
தெரியுந் தன்சாயற்
கண்டொரு பேடிது வென்று திளைப்பக்
காமுறு மாடுவொரால்
காவி நறும்பா சடையிற் றங்கிய
காமரு குருகுடனத்

தண்டினை வாய்கொண் டார்ப்பத் தவறித்
    தண்புனன் மூழ்குபெ ழீஇத்
தழைசிறை யுதறியுள் ளெள்குறும் வளமலி
    தருசோ ணாடணிசீர்
கொண்டு தினந்திகழ் புல்லைப் புரியாய்
    கொட்டுக சப்பாணி
குமரச் சிலைவதி யமரர்க் கதிபதி
    கொட்டுக சப்பாணி. (௧௦)

சப்பாணிப்பருவ முற்றிற்று.

---

## முத்தப்பருவம்.

பத்தித்திரு மணிமாளிகை
    பகலைப் * பகல் செய்யும்
பணிவெங்கயி றிட்டண் டர்கள்
    பயவாரி மதிக்கும்
மத்திற்பொரு செய்குன் றொடு
    மதிமாமணி வாயின்
வழியேசெல வளர்கோ புரம்
    வடமேருவை நேர
வெத்திக்கும்வில் வீசிப் பட
    ரிரவுக்கிற வெய்த
விமையோர்தப தியுநா ணுற
    வெழிலைத்தரு புல்லை
முத்தர்க்கருண் முத்திக் கிறை
    முத்தந்தனை யருளே

---

* பகல் - பிளத்தல்.

முருகாதிரு மருகா வொரு
முத்தந்தனை யருளே. (௯)

வேலைச்சுடர் வாளைப் பழி
விடவாவிழி மடவார்
மேருத்தன பாரத் துணை
விம்மப்பிரி கணவர்
பாலைப்புய மாவெற் பொடு
மருவற்குறு மூடன்
மதியைத்தடை புரியக் கழி
யணிசேரணி மறுகின்
பாலுற்றொளி ரத்தீ பிகை
பலவைத்தன புல்லைப்
பதிவாழரு ணிதியே யுமை
பதிகாதினில் வேத
மூலப்பொரு ளுரைவாய் மணி
முத்தந்தனை யருளே
முருகாதிரு மருகா வொரு
முத்தந்தனை யருளே. (௰)

பாவாணரின் மலர்வண் டிசை
பாடுங்குயில் கூடும்
பலவின்கனி சாடுங் கவி
பசுமாமயி லாடுங்
காவார்தரு வளனும் பணை
களிநேர்தரும் வாளனுங்
கனநீர்தரும் வளனும் பல
கவினுஞ் சோணாடா

கோவார்தரு குமரா சல
குமராசல முறம்மை
குந்தாமை குந்தா திபர்
குலிசன்புகழ் தேவே
மூவாமுழு முதலே யொரு
முத்தந்தனை யருளே
முருகாதிரு மருகா வொரு
முத்தந்தனை யருளே. (௯)

* ஆசைக்கரி யோடத் தனி
† யாசைக்கிரி யாட
வமராவதி யுலகோ டுபொ
னமராவதி கூட
நாசத்தினை யுறுமென் னவு
நாசத்தை யிழந்து
நமனுருயிர் தடுமா றமு
னமநாரத னயரும்
மாசைத்தவிர் வேள்விக் கிடை
வருவாயுவி னுலவும்
‡ வருடைப்பரி யிவர்புல் லையின்
வாழ்வேயளி மேவி
மூசக்கமழ் நீபப் புய
முத்தந்தனை யருளே
முருகாதிரு மருகா வொரு
முத்தந்தனை யருளே. (௰)

நந்தாவள முந்தா பதர்
நண்ணுந்தா வளமும்

---

* ஆசை - திக்கு. † ஆசை - பொன். ‡ வருடை - ஆடு.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

களிர்சந்தருண் மணநா றுநல்
வளமுந்தரு பொதிகை
மந்தானிலம் வந்தா நில
மருவிக்கடை சியர்கூழ்
மாறென்களை களையக் களை
மாற்றுஞ்சோ ணாடா
செந்தாமரை யடிமீ தணி
செந்தா * மரை வாயிற்
றிகழ்நூபுர மொடுதண் டை
சிலம்பத்தணி வந்து
முந்தார்மறை முதலே யொரு
முத்தந்தனை யருளே
முருகாதிரு மருகா வொரு
முத்தந்தனை யருளே. (௫)

வேறு.

கார்கொண்ட முகிலைப் பிழிந்துண் டுமிழ்ந்தெனக்
கட்டுடைந் தூற்று நீத்தக்
கரடக் களிற்றுரிக் கஞ்சுகக் கிஞ்சுகக்
கனிவாய்க் கனிக்கி டந்தந்
தேர்கொண்ட செம்பவள மேனியணி வெண்ணீற்
றிரும்பொடித் தொகையி னோடஞ்
செய்துசெஞ் சீறடிப் பொடியுங் கலந்துற
விவர்ந்துவிளை யாட னோக்கி
வார்கொண்ட துத்திப் பணப்பணி யுடன்கலா
மதியிற் றிருந்த முடிமேல்
வளருமப கிரதி பரிந்தெடுத் திலகமடி
வைத்தணிகள் பலதிருத் திச்

---

மரை - தவளை.

சீர்கொண்ட மகவுரிமை காட்டிமுத் தாடிபவ
திருவாயின் முத்த மருளே
சிகரவட வரைதணிய வளர்குமர மலையதிப
திருவாயின் முத்த மருளே. (௬)

அந்தரத் தமரரொரு புடைநிற்ப வொருபுறத்
தவுணர்நின் றரவை நாணு
யார்த்துத் தரங்கஞ் சுருட்டும் பயோததி
யலம்பப் புலம்ப மேனாண்
மந்தரமெ னுங்கிரி நிறீஇமதிக் கத்தோன்றும்
வானமுதெ டாற்றி னைப்போர்
மருஉங்கோ கிலந்தத்தை யோசெய்ப கற்றுவின்
மடிகொன் றுகவர முதமோ
பைந்தொடிக் குறமான் மொழிக்குவமை யாமெனப்
பகருமென் கிழவியந் தேன்
பன்னிரு செவித்துளை நிரப்பியுட் போந்துளம்
பரவவன் பேயுரு வமாய்ச்
சிந்தையொத் தவண்மணிக் கவுளின்முத் திட்டவா
திருவாயின் முத்த மருளே
சிகரவட வரைதணிய வளர்குமர மலையதிப
திருவாயின் முத்த மருளே. (௭)

சங்குறழ் மிடற்றுத் திருக்கங்கு மருமச்
சரோருகக் கண்ணா னீன்ற
தாமரைக் கண்ணனை விளித்துநின் பணியாது
சாற்றென்ன நீவி னவலும்
பங்கமற வுலகம் படைத்தலென் றொழிலெனப்
பழமறைக் காதிமனு வின்

படுபொரு ளுணர்த்தெனத் தெரியாமை கண்டுபத
　　பதுமத்தி னுலுழைந்து
மங்கவலை நாற்றலை குலுங்கக் கரங்குட்டி
　　யடுதாட் டுணைக்கு நிகள
மார்த்தச் சுறக்கந்த மாதனக் குகைதனி
　　லருஞ்சிறைப் பட்டு முலவே
செங்கனியு நாணப் பணித்தசெம் பவளநேர்
　　திருவாயின் முத்த மருளே
சிகரவட வரைதணிய வளர்குமர மலையதிப
　　திருவாயின் முத்த மருளே. (அ)

வேறு.

தன்னின் மிக்கோ ரிலையெனற் கோர்
　　சான்றாப் மழுவைக் கரந்தூக்குந்
தனியில் கருணைப் பெருந்தகையாஞ்
　　சசிவேய் மணிவே யீன்றமுத்து
முன்னி னரிய தவநெடுநா
　　ளோவா துஞற்றுந் தாபதரோ
டுகளக் கமலத் துறைமடவா
　　ருவக்குங் கொழுநற் கரிவரிதாய்ப்
பொன்னின் குவடுஞ் சிறுவிதியும்
　　புரிமா தவப்பே றெய்தியிறும்
பூதுண் டாகத் தடநதியிற்
　　பூந்தா மரையும் பணிலமுமீன்
கன்னி முத்து மீன்றவிளங்
　　காளாய் முத்தந் தருகவே
கந்தா குமர மலைக்குகந்தாய்
　　கனிவாய் முத்தந் தருகவே. (கூ)

கொம்பிற் றேனை நசைகொண் முடக்
குலமா னிடனு மடமையி னைற்
கோதாட் டயர்ந்தெட் டாப்பொருளைக்
கோடற் கழுகுஞ் சிறுமொப்ப
வம்மைப் பெருக்கும் பஞ்சமெனும்
வாழ்விற் கிடந்து கொடுகிரய
வாழ்க்கைக் காக்கைப் பொறைநிகரும்
வளர்ப்பார் நிலைப்புக் கரியநின்று
ணம்பு மன்பர்க் கருட்செல்வ
நல்கிப் பெறும்பே ரின்பசுக
நாளுந் துய்ப்பக் கடைக்கணித்தா
ணைவைநீர் ஞாலப் பெருஞ்சுடரே
கம்பக் களிற்றுக் கிளையசிறு
கனிவாய் முத்தந் தருகவே
கந்தா குமர மலைக்குகந்தாய்
கனிவாய் முத்தந் தருகவே. (௧0)

முத்தப்பருவம் முற்றிற்று.

---

## வருகைப்பருவம்.

செங்கதி ரொளிக்கற்றை வெந்நிடக் கமலமென்
சிற்றடித் துணையின் மேய
சிற்றொலிக் கிண்கிணி மணிச்சிலம் பொளிரத்
திருக்கைவிர லாழி மின்ன
வைங்கணைக் கிழவனை யடர்க்குநின் றுதைதந்த
லக்கத் துதித்த வுணரா
மடையலரை யடையவென் றிடும்வாகை யம்புயத்
தணிவாகு வலய மிளிரப்

பொங்குமலர் முகமொடு நுதற்சுட் டியுங்கருணை
பொழிவிழிக் கடையு மோங்கப்
பொற்பவள வெற்பினிடை சூழ்மினற் கொடியுறிற்
புரையுமரை ஞாணி லங்கத்
தங்கவரை நூறத் தகர்த்தசெண் டாயுதந்
தாங்குசே வகவ ருகவே
சம்புசங் கரிமதலை யின்புறுங் குமரமலை
தங்குகண் மணிவ ருகவே. (௧)

ஓதரிய மறைகளு மரந்தையுற் றுந்துருவ
வொல்லாமை கண்டுமு ளார்வின்
றொப்பனை செயற்கொருவ ராலுமொண் ணுநினைக்
கொப்பனையி யற்றல் போலப்
பேதையே முள்ளத் தவாமிக்க தன்மையாற்
பீடுலகி னன்ப ருக்கே
பிள்ளைப் பெருங்கலி துடைத்தரு ணினைச்சிறிதோர்
பிள்ளையுரு வாய மைத்து
நாதனென லாயவுனை நன்னீரி லாட்டியொண்
ணுறுநுதற் றிலத மிட்டு
நவமணிப் பணிகளிட் டுன்னழகு காணநனி
நாடிவா வெனவ ழைத்தேஞ்
சாதுசங் கம்பரவி நேயமிகு புல்லைத்
தலைச்சண் முகவ ருகவே
சம்புசங் கரிமதலை யின்புறுங் குமரமலை
தங்குகண் மணிவ ருகவே. (௨)

பொன்மணி யினொளிவீசு வடிவேற் படைக்கரம்
டொலியுமணி யெப்பு வனமும்

புகழுமணி பெண்சிகா மணியிருவர் நாப்பண்
பொருந்துசெம் மணிய டியராற்
சொன்மணி மறைக்குமெட் டாதமணி யீராறு
தோளுடைய மணிகொ டுங்கோற்
சூர்தடிந் தமரருக் கருடயா மணிபரம
சுகபோக ஞான மணிநீ
பன்மணி நிகர்க்குங் கருங்கட் சிவந்தவாய்ப்
பதுமாச னத்தி ளேங்கும்
பச்சைப்ப சுங்கொண்டன் மார்பில ணையுந்திருப்
பாவைநித மேவு புல்லை
தன்மணி தனக்கிணையி லாதசண் முகமணி
சதானந்த மணிவ ருகவே
சம்புசங் கரிமதலை யின்புறுங் குமரமலை
தங்குகண் மணிவ ருகவே. (௩)

கடியேறு கற்பகக் கானேறு நீரின்று
கமரேற வெண்குவ டுநேர்
கவினேறு படிவப் புழைக்கைவெள் ளிபநெஞ்சு
கரிசேற வாறு டுவெங்
கொடியேறு கேதனக் கொடிசெயர சொடுகொடுங்
கோலேற வேறு மாண்மை
கொண்டபுய வெற்பமர கண்டகர்கள் குன்றுரங்
குன்றுத வுர முமேகத்
திடியேறு மஞ்சத் தரங்கவன் குணிலேறு
மெழின்மார பேரி யகடு
மீர்தரக் கூவுசெஞ் சேவலங் கொடிபடைத்
தேறுக ரவனச மலரிற்
றடியேறு கூனற் பழங்கிழமெ னப்புனந்
தன்னில்வரு சேய்வ ருகவே

சம்புசங் கரிமதலை யின்புறுங் குமரமலை
தங்குகண் மணிவ ருகவே. (௪)

* குண்டலஞ் செவியுறப் பரிதியுத யஞ்செய்து
குறுநகையு டன்வ ரத்தன்
கொண்கன்வர வெனவறிந் தம்புயக் கோதைமகிழ்
கூர்வதென முகிழ்வி ரிப்பக்
கண்டழுக் காளறாங் கொண்டல்வி யங்கோதை
கண்மூடி யேதன் மதியாங்
கணவற் றணந்தபிரி வாற்றுறு சுரிமுகங்
காட்டலென வலர்மு கிழ்ப்ப
வெண்டரு தடந்திகழ் குரம்பைவா னதிசெலற்
கிட்டசோ பானமெ னவே
யிலகிய வளங்குலவு சோணாடு புகழ்புல்லை,
யிறைமறைப் பொருளு மறியாத்
தண்டணிவி திக்குமொரு தண்டனைவி திக்குமுத்
தண்டனே நீவ ருகவே
சம்புசங் கரிமதலை யின்புறுங் குமரமலை
தங்குகண் மணிவ ருகவே. (௫)

வேறு.

இந்தப் பிறவி தனிலெமக்கு
ளிருங்கட் கருணை வாராதே
யினியெப் பிறவி களினுனதா
ளிணையிற் கலப்பேங் கலவேமேற்
சிந்தத் துமிக்கும் யமபடராற்
செருக்கும் பாசந் தனைச்சுழற்றிச்

---

* குண்டலம்—ஆகாயம்.

சினமீக் கொண்டு கவரவரிற்
செய்யுந் தொழிலோன் றறியேமா
லந்தப் பொழுதெம் மாகுலநீத்
தருள வருக வென்னுமன்பர்க்
கன்பே வருக புல்லைநகர்க்
கந்தா வருக வமரேசன்
சொந்தக் குமரி காமுறுமெய்த்
துணைவா வருக பசுஞ்சூட்டுத்
தோகை விரித்து நடஞ்செய்மயிற்
றுரங்கா வருக வருகவே. (௬)

எழுதா * வேதப் போலிதனை
யெழுதா ரணியும் புகழ்ந்தேத்த
வேமச் சிலையேட் டொருகோட்டா
லெழுதும் பிரானே டகங்களிப்பப்
பொழுதார் மாலை மதிநுதற்செம்
பொற்பூ தரத்தா யணைத்தெடுக்கும்
பொருந்த மடியாந் தொட்டிலிட்டும்
புறனுந் தட்டி விழிதுயிற்று
முழுதா ரளிசூழ் கடப்பணிதோ
ளும்பா வருக தகட்டிலைவேற்
குடையாய் வருக குறச்சிறுமிக்
குறவா வருக வாதரத்திற்
றொழுதார்க் கருளும் புல்லைநகர்த்
துங்கா வருக பசுஞ்சூட்டுத்
தோகை விரித்து நடஞ்செய்மயிற்
றுரங்கா வருக வருகவே. (எ)

* வேதப்போலி—பாரதம்.

ஈமத் தாடி விதிதலையோ
டேந்திப் பணியா ரமுஞ்சமர்து
மியற்றுந் தவமா முனிமகற்ரா
வியமற் றழிந்தும் மறையாக்
காமற் காய்ந்த பெருங்கடவுள்
கல்லா விழுங்கிக் கற்றவர்க்குங்
கருதற் கரிய மறைப்பொருளைக்
காட்டா நிற்கு மன்றேற்கே
மாமிக் குயர்ந்த மூதன்மனுவை
வழுத்துங் குருவே வருகபுல்லை
யன்னை வருக குமரமலை
வாசா வருக வோராறு
சோமத் திருமண் டலமுகங்க
ளிலங்க வருக பசுங்குட்டுத்
தோகை விரித்து நடஞ்செய்மயிற்
அரங்கா வருக வருகவே. (அ)

அகந்த மறப்ப ருடலினர்
சொல்ல மறப்பர் சீர்கணிப்போர்
சுவர்க்க மறப்ப ரவிசயில்லார்
துன்ப மறப்ப ரின்பமுளா
ரகந்தை மறப்பர் ஞானியர்க
ளைய மறப்பர் விவேகியர்க
ளாக மறப்பர் யோகியர்க
ளமரும் புல்லைக் கிறைவருக
திகந்தந் துதிக்கக் கருணைபுரி
செவ்வேள் வருக சிவைக்குகந்த
செல்வா வருக மணித்திறத்துத்
தேகா வருக வனவரதந்

தொகுங்தோங் தொங்தோங் தொங்தோங்தொங்
தோமென் றிலகு பசுஞ்சூட்டுத்
தோகை விரித்து நடஞ்செய்மயிற்
றுரங்கா வருக வருகவே. (௯)

பணவா ளெயிற்றுப் பணிக்கரசும்
பதுமா சனனு நின்பேற்றைப்
பகர்தற் கரிதா மோராறு
படைவீ டமர்ந்தன் பருக்கருள்வோய்
கணமார் குணங்கு துணங்கைகொட்டக்
களம்புக் கமரி னிணங்கமழுங்
கதிர்வேல் விடுத்துச் சுரர்பகையின்
கருவே ரறுக்க வருமுதலே
மணமார் பொழிற்றேன் மிசைக்களிவண்
வழிபோஞ் சுத்த மாவுடலை
மறைப்பக் கதிர்நீ ணிறப்பரியாய்
மருவற் கென்றே வெனவயிர்ப்பாத்
துணர்வான் பொதுளும் புல்லைநகர்த்
தோன்றல் வருக பசுஞ்சூட்டுத்
தோகை விரித்து நடஞ்செய்மயிற்
றுரங்கா வருக வருகவே. (௧௦)

வருகைப்பருவம் முற்றிற்று.

23568
(9020)

# அம்புலிப்பருவம்.

செங்கமல முகமா றுறத்தோன்ற லாண்மிக்க
தெண்ணிலாப் புன்னகை யினாற்
திருவல்லி முகமலர மலருவித் தங்கவுட்
டிகழுமுத் தந்தரு தலாற்
கங்கையொடு குலவிமான் மருமானெ னப்படுங்
காட்சியாற் சூரனோ டக்
கனகமணி வடவரையின் மொய்ம்பின்வல மருவலாற்
கவினுமொண் வேலை யார்ந்து
பொங்குசின வரவம் பிடிக்கலா லந்தரப்
புலவர்களி னொருவனெ னலாற்
பொற்புமிகு கற்கடக வேந்தென்ன லாலெங்கள்
புங்கவனு நீயுமொப் பாம்
ஐங்கரற் கிளவலென வந்தருட் குழகனுட
னம்புலீ யாடவா வே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (க)

கனிதரப் பரமனை விரும்பித்து திக்கையுறு
கடவுண்யா னுடனு தித்துக்
கவினுற் குணவாரி யுற்றுமே லாசையங்
கடன்மூழ்கி முன்னமொரு நாள்
வனமருவு பொற்பூங் கொடிச்சிற் றிடைச்சிமேன்
மயல்கொடு கொடுஞ்சா பமும்
வாங்கியக் கணமங் கிராதவொளி யுருவாகி
மண்டலம் பரவவர லாற்
றனையொக்கு மென்றோ நினைச்சுட்டி வாவெனத்
தானழைக் கின்றபொ ழுதே

தனியனு ணேமெனக் கருதிவா ராதினுந்
தாழ்ப்பதெவ னீசொற் றிடா
யனவரத மடியர்மன வனசமுறை சரணனுட
னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (௨.)

கண்டபே ரண்டத்தி னுலவிவரு வாயிவன
கண்டவெளி யுருவா னவன்
கண்ணுதன் முடிக்கண் கிடப்பையம் முடியிவன்
காறுவைத் தாடிட மாம்
துண்டவெண் பிறையெனக் கிளர்வையெவ ரினுமிக்க
தூயபரி பூரண னிவன்
சுகதுக்க மனவரத முடையனீ யிவனயற்கொர்
சுகதுக்க மென்றுமிலை யா
லெண்டருஞ் சோடச கலைக்குமீ றுடையனீ
யெண்ணிலிக் கலை முழுது முள்ளா
னிரவினிற் றந்திரிவை யிவனிராப் பகலற்று
விடமுறைந் தருள்வ னதனு
லண்டர்பணி கின்றவனை நேரா யழைக்கினிவ
ணம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (௩)

வட்டவடி வத்தம் பரத்துலா யொண்கிரண
வருடம் பொழிந்து சிதமார்
மதிக்கலை யுருக்கிநீ குருவிப்பை யையமெனை
மனக்கலை யுருக்கி விழியிற்

கொட்டமிக் கானந்த பாற்பகீ ரைப்பெருக்
குவளமுத முதவுநா ணீ
கோளுரைத் தொருகோ ளிடர்ப்பட்டை யினையனெக்
கோள்செயிட ருந்தவிர்ப் பன்
உட்டகவி லர்க்கரிய வுருவாயி னுணிவற்
கொருசிறிது முருமாய் நிற
மும்பர்பரி யைப்புகி கியற்றியணி செயினுமினைத
யொக்குமோ வென்னவுழ கார்ந்
தட்டலக் குப்பிமருவு புல்லைமுரு கேசனுட
னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (௪)

குலவுதின் மரபினுக் கிரவாழதி யாவரு
குலாபிமா னங்கரு திமோ
குடிலத்தி னத்தன்மேய் மாலைபின் விசிட்டமிக்
கூர்ங்கண்ணி யெனவுன் னியோ
வுலகுபுகழ் புகழினுக் குவமிக்கும் வத்துவென
வோகைநெஞ் சிற்பொங்கி யோ
வுபயனா யகியர்தந் திருமுகத் திற்கிடந்
தொளிருவா மதியென் னவோ
சலதியை யுழுந்தெலைத் தாகப்பு ரிந்துண்ட
தமிழ்முனிக் கருளுமெங் கள்
சற்குருக டாட்சம்வைத் தூனவருக வென்றனன்
சமையுமா தவமென் கொலோ
வல்லையுயிர் முலையினெறி நுகருமரி மருகனுட
னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (௫)

களங்கனென் றுலகோ ருரைப்புகல்வ ரிவனைக்
    களங்கமு மகன்றதா யோன்
* கள்வனிற் குடிகொண்டு பணிவாயுண் மெலிவையக்
    கள்வனிவன் மனையர் சாறு
வளங்குல வெழிற்கொல்கி டுங் † குருவி னின்கலை
    வழிப்பறி பறிக்கவொவ் வோர்
மதியிலா தவர்தமை யடுப்பையிவ னுயிர்தொறு
    மதிக்குமதி யானவன் காண்
விளங்கர இளங்குமரர் மறுகுலா வருமிரத
    மெல்லியர் பிணங்கி நீத்து
வீசுசெம் மணியணிப் பணிகளை யறைப்பவலை
    மேயசெந் துகளதாய் விண்
ணளந்து செவ்வானநிக ரும்புல்லை முருகனுட
    னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
    னம்புலீ யாட வாவே. (௬)

மூப்புவன மன்றியெப் புவனமு நினக்கேவன்
    முறைசெயச் செய்தருளி நின்
மூளியுரு மாறியென் றென்றைக்கு மீளிகொளு
    முழுமதி யெனப்புரி குவன்
செப்பிலொரு பரிகார மில்குருத் துரோகமுந்
    தீரக் கடைக்கணிப் பன்
றிக்கெங்கு மோடித் திரிந்துழலு நின்றெழிற்
    சிரமந்த விர்த்தாளு வன்
துப்புறமு மேனிப் பரன்குரூஉச் சடிலக்
    துலங்கிவாழ் பதமுமொரு காற்

---

* கள்வன்; இல் - கற்கடகவீடு. † குரு - அமாவாசை.

சொற்றவறி நீப்பினுந் தணவா துறற்குறுதி
சொற்றிடுவ ளுதலா லென்
னப்பணிகின வாவென விளித்தபொழு தேயிவனொ
டம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (எ)

நன்மையிவை தீதிவை யெனும்பகுத் தறிவின்மை
நாடிஞனகொ லிவனருள் பெறின்
ராசயோ கம்பெறுவை கயரோகி யென்னுமொரு
நாமமுந் தவிர்வை யென்றுந்
தொன்மையா வருமசுர பகையச்ச மியாவுந்
துரந்திடுவை நின்னின் மிக்கார்
சொல்லின்வே றெவனுமிலை யதிசயத் தம்பந்
துலங்கிட நிறீஇயா ளுவாய்
பன்மையுள வேதோப நிடதங்க ளன்மைமொழி
பற்பல பகர்ந்து பரவிப்
பற்றுத லுருமைகண் டின்னமுந் துருவெங்கள்
பகவன்ற னுறவு வேண்டி
னன்மைநிக ருங்குழற் கொம்பிருவர் பங்கனுட
னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
னம்புலீ யாட வாவே. (அ)

உயர்திணைப் பொருளன்றி யஃறிணைப் பொருளுமா
யுடையமுப் பாலு மாகி
யுணர்தன்மை முன்னிலை படர்க்கையா நாமாதி
யுயிர்கள்பற் பலபேத மாய்
மயலுறுந் திணைபா லிடம்வேற் றுமைத்தொகையின்
வடிவங் கடந்து மேலாம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-90

வாசாம கோசரப் பொருளாய பிரமமே
  மகிதலத் தன்ப ருய்யப்
புயமாறி ரண்டாறி ரண்டுகரு ணைக்கொண்டல்
  பொழிவிழிக் கடைவாரி சம்
பொலிசண் முகத்திருக் குமரனை வருமறைப்
  பொருளையறி யாதயிர்க் கு
மயலைமிக வந்தரித் தலைநிலையு மாற்றுவ
  னம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
  னம்புலீ யாட வாவே. (௯)

சிறுமதலை யெனவெள்ளி யெக்கமுத் தங்கொடு
  திரிந்திவண் வராமை நோக்கித்
திகழுநவ வீரர்களி லொருவனை விடுத்துனைச்
  சிக்கெனத் தனிகொணர்ந் தே
நறுமதலை வேணியனும் வந்துபல நயமொழி
  நவிற்றினும வேண்டு கோட
னயவா துனைச்சிறையி லிடுவனெந் தன்றியா
  னரகேச ரிப்படி வமா
யுறுமதலை தன்னின்வந் தாடகனு ரங்கீண்
  டுயிர்ப்பலியை வாங்க லொப்ப
வுனதுயிர் குடிக்கவே லொன்றுடைய தாகலா
  லொருதர மழைத்தபொழு தே
யறுமதலை யாகியா ரூரன்முலை யுண்டவனொ
  டம்புலீ யாட வாவே
யனகனகன் மேருநிகர் குமரமலை யாளியுட
  னம்புலீ யாட வாவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

## சிற்றிற்பருவம்.

காவிற் பொலியு மலரரும்பின்
கட்டு நெகிழ்ந்துந் தாதளைந்துங்
கானம் புரிந்துஞ் செழியநறுங்
களிகொண் டருந்து மதுகரஞ்சூழ்
பூவிற் பொலியும் படிசிறந்தும்
பொதிவன் பிச்சிட் டக்கலபாய்
புலரா விருளிற் புலர்த்தலிற்
போதின் மலர்செம் பதுமமொவ்வாக்
கோவிற் பொலிந்தெம் பிராட்டிதனக்
குவப்பி னெம்மான் புயத்தணித்திண்
குவடுஞ் சுவடு படவாடல்
குயிற்று மணிதநாண் மலர்நோவத்
தேவிற் பொலியுந் தெவெளியேஞ்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (க)

இந்தக் கடல்சூழ் புவனமெலா
மெமையே பேதைத் தனமுடையா
ரெனலும் பெண்க ளெனிற்பேயு
மிரங்கு மெனலுஞ் சரதமன்றே
சந்தத் திருநான் மறைமுடிவே
சாற்றற் கரிய வருள்வடிவே
சாரன் படியர் செயுந்துதியே
தன்னை யுணர்ந்தா டயாநிதியே
யுந்தைக் குரிய சந்ததியே
யுயர்வொப் பிலாத பழம்பதியே

23568

புடாயக் கரங்க ளிடையவளை
    யுடையப் புரிந்தே மையவிலைதைச்
சிந்தச் செயினி னருட்கழகோ
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௨)

பேய்த்தேர் * நிலையின் பிரபஞ்சப்
    பித்தைத் துடைத்துன் சரண்மலரே
பேணுந் தொண்டர் பழவினையாம்
    பிணியைத் தணிக்கு மருமருந்தே
வேய்த்தோ ளுமைசீ ராட்டிநிதம்
    விரும்புங் கரும்பே மகபதியான்
மிலைச்சும் பொற்பூந் தாரணிந்த
    விறற்சிங் கேறே யமைக்கவொணா
வாய்த்தான் சமைந்த செழும்பாகே
    வடிவேல் விடுத்துச் சூர்மாவின்
மறுவில் வாழ்வும் புயவலியு
    மணித்தேர் வலியும் பின்வாங்கச்
செய்த்தே முகந்தா ரோகணித்தோய்
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௩)

ஆனந்தத் தைய தையவென
    முரணிற் கெழுமு முயலகன்றன்
முதுகிற் புலியும் பதஞ்சலிமா
    முனியுங் காணப் பொதுநடஞ்செய்

---

* பேய்த்தேர்—கானல்.

தனந்தப் பணியோ டிலகியவா
னனந்தம் பணியும் புனைந்தடியா
ரனந்தம் பணிக்கே யருள்புரியு
மம்மான் மதலாய் பொய்மானு
வனந்தத் துறச்சென் மாரீசன்
மறுகத் தெறுமான் மருமானே
வணக்குஞ் சலதி சுவறிடவே
வடிவேல் விடுத்த பெருமானே
தினந்தத் தைகள்சூழ் பொழிற்புல்லைத்
தேவே சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௪)

முருகு பருகி யளிமுரன்று
மூசும் பசுந்தண் படலையம்பான்
முடித்துப் பணிபற் பலதிருத்தி
முடங்கொண் மதியிற் களங்கமெனாக்
கருகுந திலக வாணுதலுங்
கனிவாய் முறுவற் றளவரும்புங்
கவினப் பொற்பூந் துகின்மருங்குல்
கதுவப் புனைந்தா வணமருங்கி
னருகுற் றுகந்து மணற்சோறட்
டாடற் கமைத்தே மதிற்பொறிதெவ்
வனைத்துங் கடந்து செயசங்க
மார்த்தா லெனச்சங் கொலிகிடங்கிற்
றிருகு சினமா வுழக்குபுல்லைத்
தேவே சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௫)

அண்டக் குலவைந் தருநிழற்கீ
ழமர்வா னமுதா சனர்கிளைக்கு
மரம்பைக் குழுவுக் கணிகலம்போ
லார்பொற் படிவச் சசிமுதலோர்
கண்டத் தொளிர்மங் கலநாணின்
காசில் யாப்புக் கழலாமே
காக்கும் வடிவேற் படைத்திறமுன்
கருணைத் திறமோ டெடுத்துரைப்பேம்
வண்டார்க் கொதுங்கு மாகரமா
வளர்தண் பொழிற்பூந் துணர்க்குவைகண்
மருத நிலப்பெண் மகட்குழுநர்
வதுவை யாற்றற் கமைத்தமலர்ச்
செண்டிற் பொதுளுஞ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௯)

தீட்டா மறையிற் சுருளருந்தித்
துழையுஞ் சிறக ரொடுக்கிறுங்
தண்பூஞ் சேக்கை மிசைத்துஞ்சுந்
தவள வனமே னறைமிசையும்
பாட்டா ரளிகண் * மூழ்க்கவதைப்
பாய்வெஞ் சுறவு தாக்கவஞ்சிப்
பரவச் சுரும்பர் தணந்தேகப்
படரு மெகின்வான் மீப்போதல்
வீட்டா வளவில் பவந்தவத்தான்
வீட்டிக் கதிமேற் செல்வாரின்

* மூழ்த்தல் - மொய்த்தல்.

விளங்கத் தோன்றும் படிசிறந்து
மேவுந் தடஞ்சூழ் சோணாடா
கிட்டா மறைக்கு மரிவரியோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௧)

பணிகைக் கொளிர்கங் கணமெனக்கொள்
பரம யோகிக் கருமறையின்
பயனைத் திருவாய் மலர்ந்தருளெம்
பகவ நினக்கெப் பொருளரி தாங்
கணிநற் றருவெங் கிராதனுமாய்க்
காமர் வடிவந் திரிந்துகிழக்
காயந் தரித்துக் குறமினையற்
களவிற் கற்பி னியலழித்த
துணிவிற் புரிசிற் றிலுமழிக்கத்
துணிந்தாய் கொல்லீ தழகோநீர்ச்
சுழிவெற் பொடுகை வரையுருட்டுஞ்
சுவேத நதிசூழ் சோணாடா
திணிகற் புயமீ ராறுடையோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௨)

வண்டா னஞ்சூழ் வலிகடக்க
மாட்டா னெனில்யார் வல்லரந்தோ
மதியும் விதியின் வழியன்றி
மருவா வெனுநூல் கற்றுணர்ந்து
கொண்டார் தமக்கு மல்லவர்க்குங்
கூறற் கரிய பேரின்பங்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
[B]ESANT NAGAR. MADRAS-90

குலவற் குனதின் னருளிலையேற்
கூடா வெனலும் பொய்யாமோ
கண்டா ரையய நின்மாட்சி
கழறற் பாற்றோ நான்முகனுங்
கருதற் கரிய புகழ்ப்புல்லைக்
கருணைக் கடலே வெற்புடைத்த
செண்டா யுதக்கைத் தலமுடையோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௯)

எழுநா விழியற் குனையீன்ற
வெந்தா யிமையா சலக்கொடியும்
இன்னா மொழியு முருகுநின்னா
வின்சொற் குதலை செவிமாந்தி
வழுவா தியம்பக் கேட்டுவகை
மனங்கூர்ந் தனது முகநோக்கி
வாவா விருகண் மணியெனக்கூஉய்
வாரி யெடுத்து மார்பிறுகத்
தழுவா நின்ற நின்றிருமெய்
தனிவித் தருமா சலத்தொருசார்
தயங்கு மிளம்பா லுவினுதயந்
தனையே சிவணப் பிறங்கிடுமாற்
செழுமா நீபத் தடந்தோளாய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திகழுங் குமர மலைக்கரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௧௦)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

2-3868
(1020)

## சிறுபறைப்பருவம்.

மகிதலம திக்குமர வமணிகள்கு யிற்றியொளிர்
மணிமகுட வர்த்தனர் குழாம்
மகரதர் நெருக்கமுய ரதிரதர் வருக்கமொடு
வருசம ரதத்தரு டனே
நகுகுருகு லத்தரசர் பகையதிக ரித்துவர
நவிஙிருகி றத்தரு முணை
ணரபலிகொ டுத்தளவில் பலபடையெ டுத்துமமர்
நடைபெறுக ளத்தளவ ளாய்
முகின்மழையெ னக்கணைகள் விடவிழியி லிக்குரிய
முதன்மகன்மு தற்படை யெலா
முடியவிச யத்தொடைய லணியவைவ ருக்குதவு
முசலியிள வற்கும ருகா
சிகிமுதுகி னிற்பவனி வருசரவ ணப்பெரும
சிறுபறைமு ழக்கி யருளே
திசைதிசைமு கத்தளவு குமரமலை யிற்குமர
சிறுபறைமு ழக்கி யருளே. (௧)

அருணகம லக்குலமொர் சிறிதுமுற ழற்கரிய
வணியதுப டைத்த கரநீ
டதிமதுர முத்தமிழி னிடையிடைத மிழ்ப்புலவ
ரகநெகவர் ளித்தகர மேன்
மருமருவு கற்பகமென் மரநிழலி னிற்குலவி
மகபதிமு தற்சொல்புல வோர்
வதியவசு ரக்குழுவின் வழிமுதல றச்செருவின்
வருமயிலெ டுத்தகரம் வான்
றரைசொல்கர டத்தறுகண் வெளிறுமெயு டற்றும்விழி
சதுர்நெடும ருப்பரசு வா
தருசுதைம ணத்தினுயர் விதிவழிபி டித்திடுகை
தகவிறெடு குற்றடிமை சேர்

திருவடிய ருக்கருளு மபயவர தக்கைகொடு
சிறுபறை முழக்கி யருளே
திசைதிசைமு கததளவு குமரமலை யிற்குமர
சிறுபறைமு ழக்கி யருளே. (௨)

கமகமவெ னக்கமழும் வனசமல ருற்பலநி
கழுநறைநி றைத்தொழு கவே
கழனியின்வி டுப்பவரு பயனையுற நட்டபயிர்
களைவளரு வித்துத வியே
யமைதரவி யற்றுமென வதுபுகலி னற்பர்பெற
லருமுதவி யைச்செ யினுமே
யவருறவு மிக்கமிகை யெனவிடுவர் கற்றறியு
மறிஞரென வுட்கரு தியே
தமனியவ ரைக்கனைய தனதடவு முத்தியர்க
டகுகளையெ னக்களைகு வார்
தழுவும்வள வப்பைதிர மதிலுயர்வ ளப்பநனி
தழைதருதி ருப்புல்வய லாய்
திமிதிமிதி மித்ததிமி தணதணத ணத்தவென
சிறுபறைமு ழக்கி யருளே
திசைதிசைமு கத்தளவு குமரமலை யிற்குமர
சிறுபறைமு ழக்கி யருளே. (௩)

மறைபயின்ம றைச்சிறுவர் சுருதிகளி சைக்குமொலி
மருவுமில றத்தர்ம றுகே
வருமதிதி யர்க்கமுது தரவுபச ரித்தவரை
மனைவரவ ழைக்குமொலி நீள்
கறையடிம தக்களிறு நிழலொடுபொ ரப்பிளிறு
கனைவொலியு ளைத்திண்வய மாக்
கடவொலியி யக்கிரத மணிநிரைக லிக்குமொலி
கவிஞர்கள்ப டிக்குமொ லிசேர்

குறையறாத வத்தடிய ரரகரவெ னச்சொலொலி
குருகர்மக தர்க்கதி பர்வாழ்
குடகர்வடி கர்க்கிறைவ ரெவரும்வள வர்க்கரசு
குலவுமணி முற்ற மிசையே
திறையிணைய ளக்குமொலி விரவுபுல்வ யற்கிறைவ
சிறுபறைமு ழக்கி யருளே
திசைதிசைமு கத்தளவு குமரமலை யிற்குமர
சிறுபறை முழக்கி யருளே. (௪)

கரையறு தரங்கக் கருங்கடற் கலையுடைய
காசினிக் கிருகண் மணியாக்
கதிக்குமுயர் குன்றைப்ப திக்குளோ ரன்பன்
களேபரத் துற்றகுடர் நோய்
பிரிவறவ ரந்தையுற் றஃதகல நினதருட்
பிரசாதம் வேண்டி யுனதாள்
பேணத் தெரிந்துநங் திருமுனர் மணிக் * காப்
பிரார்த்தனை செலுத்தென் னவே
யுரியபே ரன்பொடு மியற்றப் பெருங்கருணை
யுகளக் கடைக்க ணமுதா
மோவா மருந்தருளி யொருவாத வன்பிணியை
யொருவித்த பரம குருவே
திரிவித குணாதீத சுத்தநிட் களரூப
சிறுபறைமு ழக்கி யருளே
திசைதிசை முகத்தளவு குமரமலை யிற்குமர
சிறுபறை முழக்கி யருளே. (௫)

### வேறு.

கண்டலின் வண்டலெ னும்படி சிந்திய
கம்புளின் முத்தமு நீள்

* கா - காவடி.

கந்தடு குஞ்சர மொன்றிய கொம்பு
கழன் றுகு நித்தில மும்
ஞெண்டில கந்தொடு விண்டுவும் விண்டு
நெகிழ்ந்த மணித்தொ கையும்
நின்று கலந்து கிடந்தொளிர் கின்றது
நீணில வுதயமெ னத்
தெண்டிரை கொண்ட கருங்கடன் மண்டு
செழும்புன லுண்டு நபஞ்
சென்றுப டர்ந்துதி ரண்டுதி ரண்டு
செறிந்து பொழிந்து மழைக்
கொண்டன் முழங்கிடு புல்லைவ ரும்பதி
கொட்டுக சிறுபறை யே
கொற்றவ யிற்கும ரச்சிலை யுற்றவ
கொட்டுக சிறுபறை யே. (அ)

முச்சுடர் முக்கண் முதற்கட வுட்கொர்
முதற்படு பிரணவ மா
முற்பொரு ளைத்தெரி வித்தகு ருக்கண்
முகத்தருள் விழியுடை யாய்
இச்சக மற்றுள வெச்சக முற்றினு
மிச்சக மொடுபுகழ் வோய்
இக்குவி லிக்குயர் மைத்துன * செச்சை
யியக்குறு மழகளி றே
† கச்சப மொத்த புறத்தடி மைக்குழல்
கட்கய லகவிகை யாய்க்
கற்சிலை யைச்செய் பதத்தர் மகிழ்ச்சி
கருத்தெழ வருசுதை யாங்

---

* செச்சை - ஆடு. † கச்சபம் - ஆமை.

கொச்சை மொழிக்குயி லைப்புண ருத்தம
 கொட்டுக சிறுபறை யே
கொற்றவ யிற்கும ரச்சிலை யுற்றவ
 கொட்டுக சிறுபறை யே. (௭)

நவமணி யருள்சிறு மியர்சுத ரொடுமிள
 நடைபயில் பொற்ப தனே
நளினசு முகசசி மகபதி சுதையிரு
 நகில்புணர் கற்பு யனே
தவரிணை நுதலுமை விழிமணி யெனநினை
 தவம்வரு புத்தி ரனே
தகுவர்கள் குலமுழு வதுமற வமர்புரி
 தருமொரு சத்தி ரனே
அவிருமி ரவிகளி ரறுவரை நிகர்குழை
 யணிகொள் செவித்த லனே
அனவர தமுமன விடுமெழு கெனவரு
 கடியர கத்த லனே
சிவகுரு பரசுக மருள்பவ னெனவொலி
 சிறுபறை கொட்டு கவே
திருவ மிகுத்திடு குமரம லைக்கிறை
 சிறுபறை கொட்டு கவே. (௮)

* கானின் வாழைக் கனியொடு மாவின்
 கனியும்வி ருப்பமு றுங்
காமரு மேனிக் கோமள செல்வக்
 கடவுளர் நாய கமே
மானின் மானக் கயல்விழி கூறும்
 மடவியர் நட்புற மெய்

---

* கானின்வாழ் ஐ கன்னி - வள்ளிநாயகி;
மா இன் கன்னி - தேவகுஞ்சரி.

வாடியு நேடித் திரா கெய்தும்
வகையற வேதினை யே
கோனென் பாரைப் பரகதி சேர்மின்
குறைக டவிர்ப்பி ரெனக்
கூரிய ஞானப் பேறருள் சைவக்
குலமொளிர் தீப கமே
தேனின் னீபப் புயசயி லேச
சிறுபறை கொட்டு கவே
திருவ மிகுத்திடு குமரம லைக்கிறை
சிறுபறை கொட்டு கவே. (௯)

தனுர்விஞ் சையினொரு விசையன் பொருவிய
தனுர்விஞ் சையின்வல ரும்
தனதன் றனைநிகர் தனவந் தருமகி
தலையொன் றரவினின் விற்
பணமிஞ் சறிவினர் களுமொன் றலினொளிர்
டகலென் றுறழ்பிர தா
பழமொண் கலைமுழு மதியந் தனையிணை
பரவும் படிபுக ழும்
நணிதுன் றிடுதவ முனிபுங் கவனென
நவிலுஞ் சனகனின் ஞா
னமுமன் றியுநில வளமும் புனல்வள
நலமுஞ் செறிவள முந்
தினமொன் றுபுல்வயல் வருசுந் தரகுக
சிறுபறை கொட்டு கவே
திருவ மிகுத்திடு குமரம லைக்கிறை
சிறுபறை கொட்டு கவே. (௰)

முத்தப்பருவம் முற்றிற்று.

## சிறுதேர்ப்பருவம்.

கருணைப் பெருந்தே ருகைத்துநீ வந்தஞ்சு
கனலெனுந் தூணா நட்டுக்
கவினிருந் தட்டிவிண் மண் * கூவி ரம்யோ
கமாமுறுதி யச்சி ணைத்துப்
பொருவிலைம் பொறிகறங் குருளுசி நடுவெனும்
பொற்பீட மேலமைத் துப்
புந்தியென் கின்றபா சம்பிணித் திடுமனப்
புரவியாத் திட்டோர்நெறி யிற்
பரிபக்கு வப்பாகன் விடுதவத் தேருரு
பவர்சீவன் முத்தரா கப்
பகர்சோ தனைப்போர் புரிந்துஞா னுக்கினிப்
பகழியை விடுத்து மனையார்
† திரிபுரத் தைத்தகித் தருள்பரம யோகியே
சிறுதே ருருட்டி யருளே
சிமயா சலத்தினுயர் குமராசலத் திறைவ
சிறுதே ருருட்டி யருளே. (க)

நரலைப் பெரும்புன லுடுத்தபுவ னக்கொடியி
னறுநுதற் றிலக முறழ
நண்ணுதய வெற்பி ‡ னிருள் வலியெழவு மன்பதைக
ணளினத் தடந்த ளியினர்
பொருவிலிமை யெனுமிணைக் கதவந் திறந்திடப்
பொலிமணிப் பாவை யன்பர்
புந்திப் புலத்தைத் திருத்திவிளை வித்தமெய்ப்
போதக் கரும்ப ரும்பும்
இரசமிப முழைமகளிர் விழையுமின் பத்தேன
லெழின்மதுர கவிபொழி யுமோ

---

* கூவிரம் - தேர்க்கொடிஞ்சி.
திரிபுரம் - தூல, சூக்கும, காரணம். ‡ இருள்வலி - சூரியன்.

ரியற்கவிஞ னுயிருய்ய வருளுங்கரு பாமுத
மெனத்துதி யவர்க்க ழிவிலாத்
திருவும் பெருங்கல்வி யறிவுந் தருமகுழக
சிறுதே ருருட்டி யருளே
சிமயா சலத்தினுயர் குமரா சலத்திறைவ
சிறுதே ருருட்டி யருளே.

மாமேவு னீபச்செ ழுந்தார் மணித்தோளின்
வரைநின்றெ ழும்பிர தாபம்
வான்கதி ரெனத்தோன்றி நீலக்க டாவூர்தி
வசசிரவ ணனக னலிநீள்
காமேவு வைதூரி யக்கணயி ராணிமகிழ்
காவலன் மருத்து நிருதி
கடலிறை முதற்றேவர் முககமல மோடகக்
கமலமலர் தரவோங் குபொற்
* கோமே தகச்சூ ரெனுந்திமிர மகலநறை
குளிர் † புட பராக மலர்சேர்
குழன்முத்த நகையிமய மரகதக் கொடிபடரு
கொழுகொம் பெனத்திக ழுமோர்
சேமேவு பவளவரை தந்தமா ணிக்கமே
சிறுதே ருருட்டி யருளே
சிமயா சலத்தினு யர்குமரா சலத்திறைவ
சிறுதே ருருட்டி யருளே.

வீறுபடு சைவமென் பதினெற்று விட்டுமுன்
மேவெழுத் தந்தம் வைத்து
விரவுமொழி யொன்றுபர சமயத்தை முற்பாதம்
வினைவிமு னெடுத்தமொ ழியிற்

---

* கோமேதக-தேவருலகம் மேன்மையடைய. † புள் - பரா
வண்டுகளையுடைய பூந்தாது.

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90
23568
(9020)